# 05 இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக அதிகாரச் சமநிலை

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்து புத்தாயிரம் (மிலேனியம்) ஆண்டு பிறந்தது வரையான கடந்த அரை நூற்றாண்டு வரலாற்றை இப்பாடத்தில் நீங்கள் கற்கப் போகிறீர்கள். ஐரோப்பாவின் கையில் இருந்த உலகத் தலைமைத்துவம் ஐக்கிய அமெரிக்காவின் கைகளுக்கு இடம் மாறியது. அதற்கு எதிரான புதிய சக்தியாக ரஷ்யா உருவானது. அவைகளுக்கிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியைப்பற்றி இவ்வத்தியாயத்தில் கவனம் செலுத்துவோம்.

## ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சி பெற்ற விதம்

1776ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்கா சுதந்திர அரசொன்றாக உருவானது. அதிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை, உலக அரங்கில் பிரவேசிப்பதற்கு முன்னர், பலம் வாய்ந்த தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்குவதில் அது ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாயிருந்தது.

ஐக்கிய அமெரிக்க அரசு உலக வல்லரசாக எழுச்சி பெறுகையில் அவர்கள் கையாண்ட உள்நாட்டுக் கொள்கையானது, வெளிநாட்டுக் கொள்கையைப் போன்றே முக்கியத்துவத்திற்குரியதாகும். ஆகையால் அந்த உள்நாட்டுக் கொள்கை தொடர்பாகவும் சுருக்கமாக நாம் தெரிந்து கொள்வோம்.




ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
படம் - 5.1

ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சியடையத் தொடங்கியது 1914 - 1919 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இடம் பெற்ற முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னராகும். 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் தமது தேசத்தை எதிர்காலத்தில் உலக வல்லரசொன்றாக உருவாக்குவதற்காக, நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்குடன் அந்நாட்டுத் தலைவர்களும் பொது மக்களும் ஒன்றுபட்டு தேசிய உணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டனர்.

பிரித்தானியப் பேரரசிலிருந்து சுதந்திரம் பெற்ற பதின்மூன்று குடியேற்றங்களும், ஒரே அரசாக எழுச்சி பெறுவதற்குப் பொருத்தமான அரசாங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டமையே அவர்கள் கையாண்ட முதல் நடவடிக்கையாகும். அக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் நிலவிய சிறந்த ஆட்சி முறைகளையோ அல்லது தமது தாயகமான பிரித்தானியாவில் வரலாறு பூராகவும் வளர்ச்சியடைந்த பாராளுமன்ற முறையையோ பின்பற்றாது, நிறைவேற்றதி-காரத்துடன் கூடிய கூட்டாட்சி முறை ஒன்றைத் தமக்கென்று உருவாக்கிக்-கொண்டனர். இதன் வாயிலாக ஒன்றுக்கொன்று தனித்துவமான பதின்மூன்று குடியேற்றங்களும் ஒன்றிணைந்து ஒரே அரசாக இயங்க ஆரம்பித்தது.

அடுத்து, ஐக்கிய அமெரிக்கா எனும் புதிய அரசைப் பலப்படுத்துவதற்கான பொருளாதார முறை ஒன்றையும் தேர்ந்தெடுத்தனர். தனியார் முயற்சியாண்-மையுடனான சுதந்திரமான முதலாளித்துவப் பொருளாதார முறையே அதற்குப் பொருத்தமானதெனத் தீர்மானித்தனர். அதன் முதலாவது ஜனாதிபதியான ஜோர்ஜ் வொஷிங்டன் அவர்களால் நியமிக்கப்பட்ட அரச செயலாளர் (அமைச்சர்) அலெக்ஸாண்டர் ஹமில்டன் இத்தீர்மானத்தை உருவாக்கினார். அடுத்து பதவிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளாலும் அக்கொள்கை முன்னெடுக்கப்பட்டது. சுதந்திரமடையும் போது அந்நாட்டில், இடத்திற்கிடம் பரவியிருந்த சிறிய நில உடைமையாளர்களைக் கொண்ட விவசாய முறை ஒன்றே காணப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் அந்நாட்டில் விரிவான கைத்தொழில் புரட்சி ஒன்றை நடத்தி பேரளவுக் கைத்தொழில்களைக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதார முறை ஒன்றை உருவாக்கிக் கொண்டது. அதற்குத் தேவையான நிலம், நீர், கனிய வளம் அனைத்துமே அங்கு காணப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தியுடன் பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும், மின்னுற்பத்தியும், ஏனைய கட்டமைப்பு வசதிகளும் விருத்தியுற்றன.

இவற்றோடு பரந்த நிலப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்த விவசாயிகளும், தொழிலாளர்களும் துரிதமாக முன்னேற்றமடைந்தனர். இருபதாம் நூற்றாண்டில் உலக வல்லரசாகத் தோற்றம் பெறுவதற்கான பொருளாதாரப் பலத்தை, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஊடே கடந்த நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அது உருவாக்கிக் கொண்டிருப்பதை 1900 ஆண்டளவில் காணக்கூடியதாயிருந்தது.

ஐக்கிய அமெரிக்கா இவ்வாறு எழுச்சியடைவதற்குப் பொருந்தும் விதத்திலான வெளிநாட்டுக் கொள்கை ஒன்றை 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் கையாண்டு வந்தது. அக்காலத்தில், ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்கக் கண்டங்களில் குடியேற்றங்களை உருவாக்கிக் கொள்வதற்காகத் தமக்கிடையே

மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதில் ஐரோப்பியக் கண்டத்தவர்கள் ஈடுபட்டிருந்தனர். ஐக்கிய அமெரிக்கா தாம் பலமடைவதற்கான அத்திவாரத்தை இட்டுக்கொள்ளும் வரை, இது போன்ற வெளி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் ஒதுங்கியிருக்கும் வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக அதன் முதல் ஜனாதிபதியான வொஷிங்டன் பிரகடனப்படுத்தினார். அடுத்துப் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் அனைவரும் இக் கொள்கையையே கையாண்டனர். 1820 இல் ஜனாதிபதி, தமது பிரசித்தி பெற்ற ''மொன்ரோ'' பிரகடனத்தில் இதனை வலியுறுத்தினார்.

இதற்கிடையே 1865 இல் அந்நாட்டின் ஒற்றுமை சிதைவடையும் வண்ணம் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்பட்டது. என்றாலும் அதுவரை கட்டியெழுப்பப்பட்டிருந்த ஒற்றுமையால், அச்சவாலையும் சமாளித்து எதிர்கொண்டு ஒற்றுமையை மேலும் பலப்படுத்திக் கொள்ள அதனால் முடிந்தது. கைத்தொழில், விவசாய வர்த்தக நடவடிக்கைகளிலும், துரித அபிவிருத்தி ஏற்பட்டு 19 ஆம் நாற்றாண்டின் பின்னரைப் பகுதியாகும் போது உலகிலிருந்த பணக்கார நாடுகளுள் ஒன்றாக முன்னிடத்திற்கு வந்தது. இதைத் தொடர்ந்து அந்நாடு வெளி உலகு பற்றிய ஆர்வத்தையும், தமது செல்வாக்கை அங்கெல்லாம் பரப்ப வேண்டிய அத்தியாவசியத்தையும், வெளிக்காட்டத் தொடங்கியது.

பொருளாதார நலன்களைப் பெறவும் தேசியப் புகழுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அக்கால ஐரோப்பிய நாடுகளைப் போன்று ஆதிக்கம் செலுத்துவதற்கான பிரதேசங்கள் உலகில் அவர்களுக்கு எஞ்சியிருக்கவில்லை. ஆகையால் அந்நாடு புதியதோர் வழிமுறையைக் கடைப்பிடிப்பதில் தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. அக்காலத்தில் பரந்த வர்த்தகத்திற்கு வசதிவாய்ப்புகள் இருந்த சீன, ஜப்பானிய துறைமுகங்கள் சிலவற்றை ஐரோப்பியர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். ஐக்கிய அமெரிக்கா ''சீன, ஜப்பானிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனைத்து நாட்டவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்'' என்னும் எண்ணத்தைக் கொண்டிருந்தது. ''திறந்த வாயில் கொள்கை'' எனப்பட்ட இவ்வாலோசனையை 1899 இல் அரச செயலாளர் (அமைச்சர்) ஜோன் லோ தெரிவித்தார். அதன் வாயிலாக ''மெகன்ஸி'' ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக ஐக்கிய அமெரிக்கா பரந்த வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகள் சம்பந்தமாக ஐரோப்பியர்களுடன் சமனாக ஈடுபட முன்வந்தது. எனினும், தனது பலத்தைக் காண்பிக்கும் வண்ணம் முதன்முறையாக ஐக்கிய அமெரிக்கா 1898 ஆம் ஆண்டில் ஸ்பானியாவுடன் மோதல் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது.

## ஐக்கியஅமெரிக்க - ஸ்பானிய மோதல்

ஐக்கிய அமெரிக்காவுடன் விரிவான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த கியூபா அக்காலத்தில் ஸ்பானியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1895 இல் ஸ்பானியாவின் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக கியூபா சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்ப கட்டத்தில் இவ்விடயத்தில் ஐக்கிய அமெரிக்கா நடுநிலைமை வகித்தது. 1898இல் ஹவானா துறைமுகத்தில்

நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்கக் கப்பல் ஒன்று தாக்குதலுக்கு இலக்காகி அதன் மாலுமிகள் 260 பேரும் மரணமடைந்தனர். இதனால் ஐக்கிய அமெரிக்கா ஸ்பானியாவுக்கு எதிராகப் போரில் ஈடுபட நேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில் சுதந்திரத்தை வழங்குவதற்கு முன்னர், குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு கியூபா ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கட்டுப்பாட்டில் விடப்பட்டது. என்றாலும் இதனைவிட ஐக்கிய அமெரிக்க குடியரசு அடைந்த வெற்றிகளாக ஸ்பானிய உடைமையாக இருந்த போட்டோரிகோ குவாம், பிலிப்பைன்ஸ் என்பனவற்றைப் பெற்றுக் கொண்டமையைக் குறிப்பிடலாம். புதிய வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக சீனா ஜப்பானியப் பிரதேசங்களை எதிர்பார்த்திருந்த ஐக்கிய அமெரிக்காவுக்கு இப்பிரதேசத்தைச் சார்ந்த பிலிப்பைன்ஸ் கிடைக்கப் பெற்றது முக்கியமானதாகும்.

ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இவ்வெற்றி வழியமைத்துக் கொடுத்தது. இதையடுத்து, வெளிநாட்டுக் கொள்கையாக வெளியிடப்பட்ட புதிய பிரகடனத்தின்படி பெருங் குளறுபடியின்றி, ஐக்கிய அமெரிக்கா வெளிநாட்டு ஆதிக்கத்தை உருவாக்கிக் கொள்ள முடிந்தது. அத்துடன் சீனாவுடனும் வர்த்தகக் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளையும், மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது.

முதலாம் உலக மகா யுத்தத்துடன் ஐக்கிய அமெரிக்கா வல்லரசொன்றாகி, சர்வதேச மோதல்களில் தாமும் ஈடுபடத் தொடங்கியது.

## முதலாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபடல்.

ஐக்கிய அமெரிக்க அரசு நீண்ட காலமாகக் கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக் கொள்கையைக் கைவிட்டு, 1914 இல் ஐரோப்பியர்களிடையே ஆரம்பித்த போரில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தது. 1915 இல் ஐக்கிய அமெரிக்க பிரஜைகள் பயணித்த "லூசிதானியா" எனும் கப்பலை ஜேர்மானியர்கள் மூழ்கடித்தமையே இதற்குக்காரணமாக அமைந்தது. இதனை முன்னைய பாடத்தில் விரிவாகக் கற்றது ஞாபகமிருக்கும். முதலாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க அரசு பிரித்தானியா, பெல்ஜியம், போர்த்துக்கல், இத்தாலி, கனடா, ஜப்பான், பிரேசில், சீனா எனும் நட்பு நாடுகள் அணியில் சேர்ந்து, மத்திய ஐரோப்பிய வல்லரசுகளான ஜேர்மன், ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகளுக்கு எதிராகச் செயற்பட்டது.

ஜனாதிபதி வூட்றோ வில்சன் 14 அம்சங்கள் அடங்கிய ''சகலருக்கும் நியாயம்" எனும் கடிதத்தை மத்திய வல்லரசுகளுக்கு அனுப்பிவைத்தார். தோல்வியடைந்த அணிக்கு கௌரவத்தை பெற்றுக்கொடுக்கும் வண்ணம் செயற்படுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டதாகும்.

"சகலருக்கும் நியாயம்" சித்தாந்தங்களில் சில.....

- நியாயமான சுதந்திரத்தை ஏற்படுத்துதல்.
- சர்வதேச உளவுச் சேவைகளை ஒழித்தல்.
- சமுத்திரத்தைப் பயன்படுத்துவதில் சுதந்திரத்தை ஏற்படுத்துதல்.
- யுத்த ஆயுத உற்பத்திகளைக் குறைத்தல்.
- பொருளாதாரத் தடைகளை விதிக்காமை.

1920 ஆம் ஆண்டுகளில் முதலாம் உலகயுத்தத்தின் விளைவால் பெரும் பொருளாதார மந்தத்தால் உலக நாடுகள் பலவற்றினதும் பொருளாதாரம் ஸ்தம்பித்து போய்விட்டது எள்றாலும் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காணப்பட்டது. யுத்தத்தின் போது ஆயுத வியாபாரத்தால் பெருந்தொகைப் பணத்தை இந்நாடு ஈட்டிக் கொண்டமையே அதற்கான காரணமாகும். அதைத் தொடர்ந்தும் உலக நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதியால் பெருந்தொகைப் பணம் வருமானமாக வந்து கொண்டிருந்தது. இன்றும் அந்நிலை தொடர்கிறது.

வெள்ளை மாளிகை
படம் 5.2

## இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபடல்

இரண்டாம் உலகயுத்தத்தின் போது 1941 டிசம்பர் 7ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க குடியரசின் பேர்ள் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அதன் கப்பல்கள் மீது ஜப்பான் குண்டு பொழிந்தது. இதனால் ஐக்கிய அமெரிக்கா இப்போரில் ஈடுபட நேர்ந்தது. அப்போதைய ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி பிரங்ளின் ரூஸ்வெல்ட் ஆவார்.

பேர்ள் துறைமுகத்தை
குண்டு வீசித் தகர்த்தல்
படம் 5.3

1945 பெப்ரவரியில் ஜப்பானை சரணடையுமாறு ஐக்கிய அமெரிக்கா கோரியது. அதற்கு இணங்காமையால் அந்நாட்டின் மீது 1945 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஹிரோஷிமாமீதும் 1945 ஆகஸ்ட் 9 ஆம் திகதி நாகஷாகிமீதும் அணுகுண்டுகளைப் போட்டது. இதனால் இலட்சக் கணக்கான ஜப்பானியர்கள் மரணித்தனர். அதன் பின்னர் 1945 செப்டெம்பர் 2 ஆம் திகதி ஜப்பான் சரணடைந்தது. அப்போது அணுவாயுதத்தைக் கொண்டிருந்த ஒரே நாடு ஐக்கிய அமெரிக்கா ஆகும். இதனால் உலகப் பெரும் வல்லரசாக அது எழுச்சியுற்றது.

**இரண்டாம் மகாயுத்தத்தில்**

ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஈடுபடுத்திய ஆயுத உபகரணங்கள்

* விமானங்கள் 60,000
* விமான எதிர்ப்பு ஆயுதங்கள் 20,000
* யுத்த தாங்கிகள் 45,000
* யுத்தக் கப்பல்கள் 1,275

ஐக்கிய அமெரிக்க குடியரசினால் உற்பத்தி செய்யப்பட்ட
நவீனரக விமானம்
படம் 5.4

## அமெரிக்கா முதலாளித்துவ நாடுகளின் தலைமையை ஏற்றல்

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவுற்றதன் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து உலக சமாதானத்திற்காக நிரந்தரமான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என உலக மக்கள் எதிர்பார்த்தனர் ஆனால், இடம் பெற்றதோ வேறாக இருந்தது. 1917 இல் ரஷ்யப் புரட்சியின் பின்னர் அங்கு கம்யூனிச ஆட்சிமுறை ஒன்றை ஸ்தாபித்துக் கொண்டதோடு, அதனை முழு உலகிலும் பரவச் செய்து தனது தலைமையை ஸ்தாபிக்க முனைந்தது. இதற்கு எதிராக முதலாளித்துவப் பொருளாதார நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா குடியரசு தலைமை தாங்கிச் செயற்பட வேண்டி நேர்ந்தது.

> "ஜனநாயக ஆட்சியின் வழிகாட்டிகளாக நாமே இருக்க வேண்டும்"
>
> - பிராங்ளின் டீ ரூஸ்வெல்ட்

ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக, இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், ஐக்கிய அமெரிக்க குடியரசால் சர்வதேச மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலவும் பிரித்தானிய, பிரான்சிய நாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. இவற்றிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஐக்கிய அமெரிக்க அரசு வேண்டுகோள் விடுத்தது.

அப்போதைய ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி ஹரி எஸ். ட்ரூமன், பிலிப்பைன்சுக்கு சுதந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுத்தார். அதே போன்று பிரித்தானிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த இந்தியா, பர்மா (மியான்மார்) போன்ற நாடுகளுக்கு சுதந்திரத்தை வழங்கும்படி ஐக்கிய அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது. ஒல்லாந்தரிடமிருந்து இந்தோனேஷியா சுதந்திரத்தைக் கேட்டு நின்றது. அதன் சுதந்திரத்தில் ஐக்கிய அமெரிக்க அரசு மத்தியஸ்தர் போன்று செயற்பட்டது.

இது போன்றே ஆபிரிக்காவில் கானா, நைஜீரியா, கென்யா, உட்பட பல நாடுகளும் சுதந்திரம் பெறுவதற்கு ஐக்கிய அமெரிக்க அரசின் செயற்பாடுகள் பங்களிப்புச் செய்தன.

வல்லரசாக இருந்த ஐக்கிய அமெரிக்க அரசு ஐரோப்பிய வல்லரசுகளின் பலத்தைக் குறைத்து, உலக அரசியல் அரங்கில் தான் முதலிடத்தை அடைய வேண்டும் என்பதற்காக தந்திரமாக செயற்படத் தொடங்கியது. ஐரோப்பிய வல்லரசுகள் ஐக்கிய அமெரிக்க அரசின் நட்பு நாடுகளாயினும் அவற்றின் ஆதிக்கத்தின் கீழுள்ள நாடு அவ்வல்லரசுகளின் பலமாக இருப்பதாக ஐக்கிய அமெரிக்க அரசு கருதியது. ஜனநாயகத்தின் பேரால் இவற்றிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்து அவற்றை எல்லாம் தமது முதலாளித்துவ அணியில் சேர்த்துக் கொண்டு, தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சுயநல எண்ணம் ஐக்கிய அமெரிக்க அரசுக்கு இருந்தது.

சுதந்திரமடைந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் முதலாளித்துவ ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றும் என ஐக்கிய அமெரிக்க அரசு எதிர்பார்த்தது. அதே நேரத்தில் அதன் எதிரியான சோவியத் ரஷ்யாவோ அந்நாடுகளில் கம்யூனிச ஆட்சியை உருவாக்க எண்ணியது. உதாரணமாக 1960இல் பெல்ஜியத்திடமிருந்து கொங்கோ நாடு பெட்ரிஸ் லுமும்பா தலைமையில் சுதந்திரமடைந்தது. இவர் ரஷ்யாவின் ஆதரவாளராவார். கொங்கோவில் கட்டங்கா பிரதேசம் யுரேனியம், செம்பு, வைரம் போன்ற கனியவளம் நிரம்பப்பெற்ற பிரதேசமாகும். ஐக்கிய அமெரிக்க அரசினதும் ஐரோப்பிய தனியார் கம்பெனி முதலாளிகளினதும் ஆதரவுடன் பொயிஸ்ட்சொம்பே என்பவர் கடங்காவை சுதந்திரமான அரசொன்றாகப் பிரகடனஞ் செய்தார். அதனால் ஏற்பட்ட பிரச்சினைகளால் பெட்ரிஸ் லுமும்பா கோரமாகக் கொல்லப்பட்டு, சொம்பே வெற்றிபெற்று, முதலாளித்துவ அணியில் சேர்ந்து கொண்டார்.

## மார்ஷல் திட்டம்

1949ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம், முதலாளித்துவ, ஜனநாயகக் கோட்பாடுகளைப் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளில் ஏற்படுத்திக் கொள்வதற்கு தூண்டுதல் அளிப்பதே ஐக்கிய அமெரிக்காவின் நோக்கமாயிருந்தது. ஏகாதிபத்திய வாதத்திலிருந்து விடுதலை பெற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உதவி வழங்குவதற்காகவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அது குறிப்பிடுகிறது. இதற்கமைவாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விவசாயம், கல்வி, சுகாதாரம், போன்ற பல்வேறு துறைகளிலும் உதவிகளைப் புரிந்து வருகிறது. இதன் ஆரம்ப காலத்தில் நோர்வே, பெல்ஜியம், மேற்கு ஜேர்மன், நெதர்லாந்து, லக்ஸம்பேர்க், கிரேக்கம், துருக்கி, போர்த்துக்கல், போன்ற நாடுகளும் இதன் கீழ் உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. சோவியத் ரஷ்யா உட்பட, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இவ்வுதவியை நிராகரித்தன.

## NATO - நேட்டோ அமைப்பு

1948இல் மேற்கு ஜேர்மனியும் ஐக்கிய அமெரிக்க குடியரசின் தலைமையிலான முதலாளித்துவ அணியில் சேர்ந்து கொண்டமையால், மேற்கு பெர்லின் நகருக்கு உணவு, மருந்து போன்ற முக்கிய பொருட்களை கிழக்கு ஜேர்மனி ஊடாகக் கொண்டு செல்லும் புகையிரதப் பாதையை ரஷ்யா மூடிவிட்டது. ரஷ்யாவின் இந்நடவடிக்கைக்கு எதிராக முதலாளித்துவ அணி நாடுகள் ஒன்று சேர்ந்து வடக்கு அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO) ஒன்றை 1949 ஏப்ரல் 4ஆம் திகதி கையொப்பமிட்ட "வொஷிங்டன் ஒப்பந்தம்" மூலமாகச் செய்து கொண்டன. அதில் ஐக்கிய அமெரிக்கா கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜேர்மனி, ஸ்பானியா, போர்த்துக்கல், டென்மார்க், பெல்ஜியம்,

நெதர்லாந்து, லக்ஸம்பேர்க், சுவீடன், ஆஸ்திரியா, அயர்லாந்து, துருக்கி எனும் பதினாறு நாடுகள் அங்கம் பெறுகின்றன. இதன் தலைமையகம் பிரான்ஸில் நிறுவப்பட்டுள்ளது. நேட்டோ அமைப்பினைத் தோற்றுவித்ததன் நோக்கம் வொஷிங்டன் ஒப்பந்தத்தின் 5வது வசனத்தில் விளக்கப்படுகிறது.

> "அமெரிக்க - ஐரோப்பிய அங்கத்துவ நாடுகளில் ஏதாவதொன்றின் மீது, எதிரி நாடொன்று தாக்குதல் நடத்துமாயின், அதனை அனைத்து அங்கத்துவ நாடுகள் மீதும் நடத்தப்பட்டதாகக் கருதிச் செயற்படுவோம்"
>
> - நேட்டோ ஒப்பந்தத்தின் 5 வது வாசகம்.

ஐக்கிய அமெரிக்கா உட்பட முதலாளித்துவ அணியின் பலத்தைப் பாதுகாத்துக் கொள்வதே இவ்வமைப்பின் பிரதான நோக்கமாகும். இதற்காக இந்நாடுகள் தமது வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் 20 வீதத்திற்கு மேற்பட்ட தொகையைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிட வேண்டியுள்ளன. ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையையும் ஜனநாயக ஆட்சி முறையையும் பரப்புவதற்காக நேட்டோவைப் பயன்படுத்துகிறது.

## அமெரிக்க அரசுகளின் ஒன்றியம்

இலத்தீன் அமெரிக்க நாடுகள் 21 உடன் சேர்ந்து ஐக்கிய அமெரிக்கா அமெரிக்க அரசுகளின் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. கியூபாவின் ஊடாக பொது உடைமைவாதம் இந்நாடுகளில் பரவுவதைத் தடுப்பதே இவ்வமைப்பின் நோக்கமாகும். ஹொண்டி யூராஸ் குடியரசு, லீமா குடியரசு, நிக்கரகுவா, ஆர்ஜன்டீனா, பிரேசில், கொலம்பியா, எல்சல்வடோர், மெக்ஸிக்கோ, பனாமா, பேரு, உருகுவே, வெனிசியுலா போன்ற நாடுகள் இதில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

தற்காலத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கே உரிய ஏழ்மை, தொழிலின்மை, பணவீக்கம் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அங்கத்துவ நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதால், ஐக்கிய அமெரிக்க அரசின் வழி காட்டுதலைக் கவனத்தில் எடுக்காது விட்டுள்ளன. அதற்குப் பொருத்தமான உதாரணம் வெனிசியுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் ஐக்கிய அமெரிக்காவுக்கு சவால் விடுத்துக் கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

## இஸ்ரேல் தோற்றுவிக்கப்பட்டமை

1948 - பெல்பர் அறிக்கையின்படி அனைத்து அரபு நாடுகளினதும் விரோதத்துக்கு மத்தியில் பிரித்தானியாவும், ஐக்கிய அமெரிக்க அரசும் சேர்ந்து இஸ்ரேல் என்று ஒரு நாட்டை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அரபு உலகத்தில் - மத்திய கிழக்கில் ஐக்கிய அமெரிக்க அரசின் செல்வாக்கை முன்னெடுக்கும் பணியை இஸ்ரேல் செய்கிறது. ஐக்கிய அமெரிக்க அரசு உலகில் எந்தவொரு நாட்டின் மீதும் கொண்டிராத அளவுக்கு இஸ்ரேல் மீது அபிமானத்தையும், நம்பிக்கையையும் வைத்துள்ளது.

## இரகசிய உளவுச் சேவை (CIA)

மத்திய இரகசிய உளவுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டோரின் தொகை 20,000 க்கு மேலாகும். உலகம் பூராகவும், பரந்திருக்கும் பத்திரிகையாளர், சட்ட அறிஞர்கள், அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள், பேராசிரியர்கள், போன்ற பல்வேறு தராதரத்தினரையும் தமது சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இவர்களால் இயலுமாயிருந்தது. யுத்த முறையிலோ, புத்திசாலித்தனமாகவோ ஐக்கிய அமெரிக்காவுக்கு அவர்களின் கொள்கைகளுக்கு எதிராக உருவாகும் நடைமுறைகளைத் தடுப்பதே இச்சேவையின் நோக்கமாகும். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியும், இச்சேவையாலேயே நிகழ்த்தப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இஸ்ரேலினாலும் பிரசித்தி பெற்ற உளவுச் சேவை ஒன்று நடத்தப்படுகிறது. அது 'மொஸாட்" என அழைக்கப்படுகின்றது. அவர்களும் பொது உடைமைவாதத்திற்கு எதிராக ஐக்கிய அமெரிக்காவின் சிந்தனை, அரசியல் விடயங்களைப் பரப்புவதில் பங்களிக்கின்றனர்.

## பொது உடமைவாதத்திற்கு எதிரான நாடுகளுக்கு வழங்கும் உதவிகள்

வடகொரியா பொது உடைமை நாடுகள் அணியில் சேரும்போது, தென் கொரியாவுக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை அமெரிக்கா வழங்கியது. சீனா தூரகிழக்காசியாவின் முக்கியமான பொது உடைமை நாடாகத் திகழ்ந்த போது அதன் செல்வாக்கு அப்பிராந்திய நாடுகளில் பரவாமல் தடுப்பதற்காக அவற்றுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டு, ஜப்பானூடாக அப்பிராந்தியத்தில் ஜனநாயகத்தையும், முதலாளித்துவத்தையும் ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வியட்நாமிலும், நிக்கரகுவாவிலும் பொது உடைமைவாத அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டபோது, அங்குள்ள எதிர்ச்சக்திகளுக்கு உதவி ஒத்தாசை புரிந்து கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டது.

இவ்வாறு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவப் பொருளாதார முறையையும், ஜனநாயக ஆட்சி முறையையும் நிலைநிறுத்துவதற்குப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

செயற்பாடு :

ஐக்கிய அமெரிக்க அரசு உலகில் முதலாளித்துவ அணியைப் பலப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

## சோவியத் ரஷ்யா உலக வல்லரசாக எழுச்சியுறல்

"உணவு, நிலம், சமாதானம்" என்பவற்றைப் பெற்றுத் தருவதாகக் கூறி விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆதரவுடன் 1917 ஒக்டோபர் புரட்சியை நடத்தி வெற்றிபெற்ற லெனின் உலகின் முதல் பொது உடைமை அரசை ரஷ்யாவில் உருவாக்கினார்.

பொது உடைமைப் புரட்சியின் வெற்றிக்குப் பங்களித்த காரணிகள் வருமாறு

- ❖ சர்வாதிகார மன்னரால் மக்கள் அனுபவித்த துன்பங்கள்
- ❖ ரஷ்யாவில் காணப்பட்ட பொருளாதார அழுத்தங்கள்
- ❖ விவசாயிகளும் தொழிலாளர்களும் படையினரும் எதிர்நோக்கிய பிரச்சினைகள்.
- ❖ நிலப் பிரபுக்களின் கொடுமையான அதிகாரம்
- ❖ நிலப் பிரபுக்களும், சமய குருமார்களும் கூடிய சுகபோகத்தை அனுபவித்தமை.



லெனின்
படம் 5.5

இக்காரணிகளால் விளைந்த ரஷ்யப் புரட்சியால் நிலம், வங்கி, தனியார் தாபனங்கள் அனைத்தும் பொது உடைமையாக்கப்பட்டன. தொழிற்சாலைகளின் நிர்வாகம் அங்கு வேலை பார்த்த தொழிலாளர் குழுக்களிடம் ஒப்படைக் கப்பட்டன. இதனால் 1917 - 1921 வரையான கால கட்டத்தில் எதிர்பார்த்த இலக்கை எட்டமுடியவில்லை. எனவே லெனின் 1921 - 1924 ஆண்டு காலகட்டத்தில் புதியதொரு பொருளா தாரச் சீர்திருத்தத்தை மேற்கொண்டார். இதற்கமைய நிலம், பாரிய கைத்தொழில்கள், வங்கிகள், வர்த்தக நடவடிக்கைகள் அனைத் தையும் அரசுடைமையாக்கினார். பொருட்களை விநியோகித்தல், சில்லறை வர்த்தகம் என்பவற்றில் பொதுமக்கள் ஈடுபட இடமளிக்கப்பட்டது. இப்பொருளாதாரக் கொள்கைகளால் சுறுசுறுப்பான சந்தை உருவாகி, பொருளாதாரம் உறுதியடைந்தது. லெனினால் உருவாக்கப்பட்ட நிர்வாக முறையால் சக்திவாய்ந்த அரச கட்டமைப்பொன்று ஏற்பட்டது. இதனால் பொருளாதாரமும் பலப்பட்டது.

லெனினை அடுத்து பதவியேற்ற ஸ்டாலின் உறுதியான நிர்வாகத்துக்குப் பெயர் போனவர். 1924 இல் தலைமைக்கு வந்த அவர் ஐந்தாண்டுத் திட்டங்களை செயற்படுத்தினார். அவற்றின் நோக்கம், ரஷ்யாவைப் பொருளாதார சக்திமிக்க நாடாக்குவதேயாகும் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1928 இல் செயற்படுத்தப்பட்டது. அதன் மூலம் பெரும் விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் நவீன முறையிலான உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை கூட்டுறவு அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டன. இதனால் தொழில்கள் பெருகின. உற்பத்தி பெருகியது. பொருளாதாரமும் வளர்ச்சியுற்றது.

ஸ்டாலின் ஐந்தாண்டுத் திட்டங்களை செயற்படுத்துவதற்காக ''கோஸ்ப்ளன்'' எனும் அரசாங்க ஆணைக்குழு ஒன்றை நிறுவினார். இவ் ஐந்தாண்டுத் திட்டத்தால் ரஷ்யாவின் கைத்தொழில் உற்பத்தி 136 வீதமும், விவசாய உற்பத்தி 35 வீதமும் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. மேலும் வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து, ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட கனிய எண்ணெய் உற்பத்தி இலக்கை இரண்டரை ஆண்டுகளிலேயே அடையக்கூடியதாயிருந்தது. உழவு இயந்திரம், விவசாய உபகரணங்கள், மோட்டார் வண்டி என்பவற்றின் உற்பத்தியில் 1933இல் எதிர்பார்த்த இலக்கை அடையக் கூடியதாக இருந்தது. நிலக்கரி, சீனி, மின்சார உற்பத்திகளின் திட்டமிடப் பட்ட அளவை மூன்று ஆண்டுகளில் அடையக் கூடியதாய் இருந்தது. இரும்புருக்கு, துணி என்பவற்றின் உற்பத்திகள் திட்டமிட்ட அளவையும் மிஞ்சிச் சென்றன. துர்க்கிஸ்தான் - சைபீரியன் புகையிரதப் பாதை அமைத்தலும் திட்டமிடப்பட்ட காலத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே முடிக்கப்பட்டது.

ரஷ்யாவின் மே தினம்
படம் 5.6

இவ்வாறாக முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றியளிக்கவே தொடர்ந்தும் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதனால் ரஷ்யப் பொருளாதாரம் பலமடைந்தது.

ஸ்ராலினை அடுத்து பதவிக்கு வந்த நிகிடா குருஷேவும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்தார். அவர் உற்பத்திக் கைத்தொழிலை மேலும் பலமடையச் செய்வதற்காக பிரதேச மட்டத்திலான அமைப்புக்களைத் தோற்றுவித்து அவற்றிடம் பொருளாதார நடவடிக்கைகளைக் கையளித்தார்.

பொருளாதார ரீதியாகப் பலமடைந்தமையால் கல்வி, விஞ்ஞானத் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. 1932இல் மின் உற்பத்திக்காக அணு சக்தியைப் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகளில் ரஷ்யா ஈடுபடத் தொடங்கியது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்க அரசு உள்ளிட்ட முதலாளித்துவ அணியுடன் ஏற்பட்ட போட்டியால் ஏவுகனைகளை விண்வெளியில் வைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. இதனால் 1960இல் விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1961இல் ரஷ்யரான யூரிககாரின் முதன்முதலாக விண்வெளியில் சஞ்சரித்த மனிதர் என்றும் அவரை அடுத்து வெலன்டினா தெரஸ்கோவா முதல் விண்வெளிப் பெண் என்றும் பெருமை பெற்றனர்.

ரஷ்யா அடையப் பெற்ற அரசியல், பொருளியல் பலத்தால் பொது உடைமைக் கோட்பாட்டைப் பிரபல்யப்படுத்துவதற்காக அவர்களின் பணத்தைப் பெருமளவுக்குச் செலவிடக்கூடியதாக இருந்தது. அரசாங்கத்தின் துணையுடன் ரஷ்ய அரசியல், பொருளியல், சமூக அமைப்பு தொடர்பான நூல்கள் பல்வேறு மொழிகளில் பிரசுரிக்கப்பட்டு மிகவும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்பட்டன.

## ரஷ்யா பொதுவுடைமை அணியின் தலைமையை ஏற்றல்.

பொருளாதார ரீதியாக பிரபல்யமடைந்த ரஷ்யா தனது பொது உடைமைக் கொள்கையைப் பரப்புவதில் ஈடுபட்டது. 1940 இன் இறுதிப் பகுதியில் பொதுவுடமை அரசொன்று வடகொரியாவில் உருவாகியது. 1949இல் மாவோ சேதுங் தலைமையில் சீனாவில் பொது உடைமை ஆட்சி ஒன்றை உருவாக்கிக் கொள்ள அதனால் முடியுமாயிருந்தது. தொடர்ந்தும் சீனாவுக்கு உதவிகளை வழங்கி வந்தது. 1959இல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்ற சர்வாதிகாரியான பெடிஸ்டாவின் அரசைக் கவிழ்த்து இடதுசாரி அரசொன்றைத் தாபிப்பதற்கு பிடெல் கஷ்றோவுக்கு முடியுமாயிருந்தது. அதுபோல கிழக்கு ஐரோப்பாவில் போலந்து, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா, கிழக்கு ஜேர்மன் நாடுகளிலும் பொது உடைமை முறை ஸ்தாபிக்கப்பட்டது.

## வோர்ஸோ அமைப்பைத் தோற்றுவித்தல்

கிழக்கைரோப்பிய பொது உடைமைவாத நாடுகளான கிழக்கு ஜேர்மனி, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா, பல்கேரியா எனும் நாடுகளை இணைத்து ரஷ்யா 1955 - மே 11இல் போலந்தின் தலைநகரான வோர்ஸோவில் ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட்டது. நேட்டோ அணியிலிருந்து எதிர்நோக்கும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கவே ''வோர்ஸோ அணி'' உருவாக்கப்பட்டது. ஏதாவது ஓர் எதிரி நாடு இவ்வமைப்பைச் சேர்ந்த ஏதாவது ஒரு நாட்டுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அது தமது நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகக் கருதிச் செயற்படுவதற்கு அங்கத்துவ நாடுகள் தீர்மானம் மேற்கொண்டன.

பொது உடைமைக் கொள்கைகளைப் பரப்புதல், பாதுகாத்தல் என்பன இவ்வமைப்பின் மூல நோக்கமாயிருந்தது. அதற்கமைய, இவ்வமைப்பு 1956இல் ஹங்கேரியில் ஏற்பட்ட புரட்சிக்கும் 1968இல் செக்கொஸ்லோவாக்கியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்குவதற்கும் உதவிகளைப் புரிந்தது.

## பொதுவுடைமைக் கொள்கை பரவுதல்

சீனா, கியூபா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளின் பின்னர் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் கம்யூனிச ஆட்சி அலைவீசத் தொடங்கியது. ஹோசி மின் தலைமையில் வியட்னாமில் கம்யூனிச அரசு ஒன்று உருவாகியது. கொங்கோவின் தலைவர் பெட்ரிஸ் லும்பா பொது உடைமை வாதத்தைச் சார்ந்தார். எகிப்தில் அப்துல் கமால் நஸார், அஸ்வான் அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு மேற்கத்திய நாடுகளிடம் உதவி கோரி கிட்டாத போது பொது உடைமை அணியைச் சாரத் தொடங்கினார். இது போல லிபியாவில் கடாபி, இந்தியாவில் நேரு என்போரும் ரஷ்யாவின் பொது உடைமை வாதத்தில் நேரடியாகச் சாராத போதும் ஐக்கிய அமெரிக்க முதலாளித்துவத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆப்கானிஸ்தானில் ரஷ்ய இராணுவம் நிலை கொண்டது. இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றபோது, அதன் முதல் பிரதம மந்திரியான டி.எஸ். சேனாநாயக்க ஐக்கிய அமெரிக்காவுக்குச் சார்பான கொள்கையைக் கடைப்பிடித்தார். ஆனால் 1956இல் பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பொது உடைமை நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தி உதவிகள் பெறும் வண்ணம் ஒப்பந்தங்களை மேற்கொண்டார்.

## KGB உளவுச் சேவை

பொது உடைமைவாத அணியின் உளவுச் சேவையான K. G . B., ஐக்கிய அமெரிக்க அரசு உளவுச் சேவையான C. I. A. போன்றே பிரசித்தமானதாகும். இது ரஷ்யாவில் மொஸ்கோவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டது. தனது எதிரணியான அமெரிக்கா உள்ளிட்ட முதலாளித்துவ நாடுகளின் யுத்த இரகசியங்களைப் பெற்றுக் கொள்வதோடு, பொது உடைமைவாதத்தைப் பரப்புவதிலும் ஈடுபடுகிறது. நவீன நுட்பங்களை இதற்குப் பயன்படுத்துகிறது. சில சந்தர்ப்பங்களில் C. I. A. உத்தியோகத்தர்களுக்கும் பணம் கொடுத்து தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்கள், பேராசிரியர்கள், அரச மேலதிகாரிகள் என்றவாறு பல்வேறு வகைப்பட்டோரும் இவ்வமைப்புடன் சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ளனர். அதி நவீன தொழினுட்பத்தை இதற்காகக் கையாள்கின்றனர். முதலாளித்துவ அணியினரின் தகவல்களைப் பெற்று அதற்கு மாற்றுகளைக் கண்டறிந்து, பொது உடைமை வாதத்தைப் பரப்புவதே இதன் நோக்கமாகும்.

இதன்படி பார்க்கையில், ஐக்கிய அமெரிக்கா அரசு முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் கையாளும் அதே தந்திரத்தை, ரஷ்யா பொது உடைமைவாதத்தைப் பரப்புவதற்கும், பாதுகாப்பதற்கும் கையாளுவதற்கும் முயற்சி செய்கின்றது.

**செயற்பாடு :**

உலகப் புறவுருவப் படமொன்றில் நேட்டோ, வோர்ஸோ அமைப்பு நாடுகளை வேறுபடுத்தும் வண்ணம் குறித்து பெயரிட்டு நிறைந்தீட்டுக.

## ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள்

ஐ. நா. சபையின் அமைப்புத் தொடர்பாக 11.4 அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளபடியால், இங்கு அத்தாபனம் உலக சமாதானத்திற்காக, ஆற்றும் பங்களிப்பை மாத்திரம் பார்ப்போம். இதனைக் கீழ்வரும் மூன்று தலைப்புகளினூடாக வகுத்து நோக்குவோம் :

01. கெடுபிடிப்போரின் போது ஐ. நா. சபையின் செயற்பாடுகள்.

02. கெடுபிடிப்போர் முடிந்த பின்னரான செயற்பாடுகள்.

03. ஆயுதப் பரிகரணம்

## கெடுபிடிப் போரின் போது ஐ. நா. வின் செயற்பாடுகள் :

உலகப்போரை அடுத்து நாடுகள் இரு அணிகளாகப் பிளவுபட்டு கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் எனக் குறிப்பிடப்படும் ஆயுத மோதலற்ற கொள்கைப் போர் ஒன்றில் ஈடுபடத் தொடங்கின. 1945 இன் பின்னர் நான்கு தசாப்தங்களாக முதலாளித்துவ - சமவுடமைவாத அணிகளுக்கிடையே இது போன்ற பலப்பரீட்சையும், ஒன்றுக்கொன்று நம்பிக்கையின்மையும், கொள்கைப் போரும், ஒன்றுக்கொன்று அச்சுறுத்தலும், இரகசிய உளவுத் தாபனங்கள் என்பனவும் இப்போரின் பிரதான இலட்சணங்களாகின. இக்கெடுபிடிப் போர் காலத்தில் உலகின் சிற்சில இடங்களில் இரு அணிகளுக்கும் இடையே ஏற்பட இருந்த ஆயுத மோதல்கள் ஐ. நா. சபையால் தடுத்து நிறுத்தப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் வருமாறு :

ஐ. நா.வின் சமாதானப்படை
படம் 5.7

பெர்லின் பிரச்சினை
சுயெஸ் நெருக்கடி
கியூபா நெருக்கடி
கொரியப் பிரச்சினை

## பெர்லின் பிரச்சினை

இரண்டாம் உலகப் பெரும்போரின் பின்னர் பெர்லின் நகரம் கிழக்கு, மேற்கு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு பெர்லினுக்கு நாணய சீர்திருத்தத்தை மேற்கு நாடுகள் அறிமுகப்படுத்தின. அதனால் 1948 ஜூன் 23 ஆம் திகதி மேற்கு பெர்லினுக்குள் பிரவேசிக்கும் அனைத்து வழிகளையும் மூடிவிடுவதற்கு ரஷ்யத் தலைவர் ஸ்ராலின் முடிவு செய்தார். ஜேர்மன் மேற்கு கிழக்காக இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டபோது, அவற்றின் முன்னைய தலைநகரான பெர்லின் கிழக்கு ஜேர்மனிக்குள் சென்று விட்டது. அதனால் தலைநகரும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு வருடமளவுக்கு நீடித்த இப்பிரச்சினை 1949 மே 4 ஆம் திகதி ஐ. நா. சபையின் செயலாளர் நாயகத்தின் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டது. பெரும் வல்லரசுகளின் பலப்பரீட்சையின் ஓரம்சம் இவ்வாறு முடிவுற்றது.

## கொரியப் பிரச்சினை

1948 இல் கொரியக் குடாநாடு வடக்கு - தெற்காகப் பிளவுபட்டது. வட கொரியா ரஷ்யாவுக்கும் தென் கொரியா அமெரிக்காவுக்கும் சார்பாயிருந்தன. வட அகலாங்கு $38^0$ பாகை இரு நாடுகளுக்குமான எல்லையாக நிர்ணயிக்கப்பட்டது. என்றாலும் 1950 ஜூன் 25 ஆம் திகதி வடகொரிய இராணுவம் தென் கொரியாவை ஆக்கிரமித்தது. தென் கொரியாவுக்கு அமெரிக்கா படையை அனுப்பியது. ஐ. நா.வின் பாதுகாப்புச் சபையில் வட கொரியா தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ரஷ்யா தனது இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கியது. 1953 இல் இரு நாடுகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. அதுவும் தோல்வியுற்றது. 1991 டிசம்பர் 13 ஆம் திகதி மீளவும் சமாதான உடன்படிக்கை அது வரை தேச எல்லையை ஐ. நா. சபையின் பொதுச் சபை கண்காணித்து வந்தது. இந்த பிரச்சினையின் போது சீனாவும் ரஷ்யாவும் வடகொரியாவுக்கும், ஐக்கிய அமெரிக்கா கொரியாவுக்கும் சார்பாக இருந்தன.

## சுயெஸ் நெருக்கடி

எகிப்திய ஜனாதிபதி அப்துல் கமால் நசார் பொதுவுடைமைக் கோட்பாட்டின்படி சுயெஸ் கால்வாயை தேசிய உடைமையாக்கினார். அதனால் பிரித்தானிய - பிரான்ஸிய கம்பெனி பாதிப்புற்றது. இதனால் இவ்விரு நாடுகளும் இஸ்ரேலுடன் சேர்ந்து, சுயெஸ் பிரதேசத்திற்குப் படையெடுத்தன. 1954 இல் ஐ. நா. சபையின் படையணி ஒன்று அப்பிரதேசத்திற்குச் சென்று, படைகளை அகற்றி சமாதானத்தை நிலைநாட்டியது.

## கியூபா நெருக்கடி

கியூபாவில் புரட்சி ஏற்பட்ட போது தோல்வியுற்று அந்நாட்டிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு ஓடிய கூட்டத்தினர், அங்கு யுத்தப் பயிற்சி பெற்று பிடெல் கஸ்ட்ரோவின் சமூகவுடமை அரசுக்கு எதிராக ஆயுதபாணிகளாகத் திரும்பி வந்தனர். இதனால் உள்நாட்டு யுத்த நிலை ஒன்று உருவானது. கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்காவின் உதவி கிடைத்தமையால், 1962 ஒக்டோபரில் அமெரிக்காவைக் தாக்கக்கூடிய வகையில் கியூபா ரஷ்ய ஏவுகணைகளை பொருத்தியது. இதனால் ஜனாதிபதி ஜோன் எப். கெனடியின் கட்டளைப்படி கியூபா முற்றுகையிடப்பட்டதோடு, ரஷ்யாவை நோக்கிய வண்ணம், துருக்கியில் அமெரிக்க ஏவாயுதங்கள் பொருத்தப்பட்டன. இந்நெருக்கடி ஐ.நா.வின் செயலாளர் நாயகத்தின் தனிப்பட்ட மத்தியஸ்தத்தின் மூலம் தளர்த்தப்பட்டது.

## கெடுபிடிப்போரின் பின்னர் ஐ.நா.வின் சமாதான நடவடிக்கைகள்

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பலம் வாய்ந்த இரு முகாம்களுக்கிடையேயான போட்டி முற்றுப் பெற்றாலும் யுத்த நடவடிக்கைகள் இடத்துக்கிடம் நடைபெற்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு இன்னும் ஐ. நா. சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவ்வாறான சில சந்தர்ப்பங்களாவன:

1. வளைகுடா நெருக்கடி
2. ருவண்டா இன ஒழிப்பு
3. கம்பூச்சியப் பிரச்சினை

## வளைகுடா நெருக்கடி

ஈராக்கின் எல்லையில் காணப்பட்ட ருமெயிலா கனிய எண்ணெய் வயலிலிருந்து குவைத் நாடு எண்ணெயை உறிஞ்சியதாக ஈராக் குற்றஞ்சாட்டியது. இதற்காக குறித்த ஒரு பெருந்தொகையை நஷ்ட ஈடாக வழங்கும்படி குவைத்திடம், ஈராக் கோரியது. இப்பிரச்சினையை வைத்து குவைத்தை அது ஆக்கிரமித்தது. இதற்கு எதிராக அமெரிக்கா படைகளை அனுப்பியது.

"ஒரு நாடு பிறிதொரு நாட்டின்மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வது சகித்துக் கொள்ள முடியாததாகும். அவ்வாறு செய்கையில் அமைதியாக அதனைப் பார்த்துக் கொண்டிருப்பது அதற்கு பக்கபலமாக இருப்பது போன்றதாகும்" என்று அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிளியூ புஷ் குறிப்பிட்டார். இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு இரண்டாவதான இந்த யுத்தத்தால் பேரளவிலான உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன. பாரிய சூழல் மாசடைதலும் இடம் பெற்றது. ஐ. நா. சபைக்கு இப்போரைத் தடுத்துக் கொள்ள இயலாமற்போனது.

## கம்பூச்சியப் பிரச்சினை

ஏவாயுதம்
படம் 5.8

1970களில் அதற்கு முன்னைய முப்பது ஆண்டுகளாக கம்பூச்சிய மன்னர் சிஹனுக்கின் அரசாங்கத்திற்கும் பல்வேறு கிளர்ச்சியாளர் களுக்குமிடையே மோதல்கள் இடம் பெற்று வந்தன. சிஹனுக் மன்னர் பெயரளவு நாட்டின் தலைவராக இருக்க, பொல்பொட் எனும் சர்வாதிகாரி நாட்டை ஆண்டு வந்தார். இவரை எதிர்த்து வியட்னாம் படையெடுத்தது. இதனைச் சமாளிப்பதற்காக 1985 இல் ஐ. நா. சபையின் செயலாளர் நாயகம் கம்பூச்சியாவின் சகல தரப்பாருடனும் கலந்துரையாடலை நடத்தினார். அதன் பிறகு 1989 இல் வியட்னாமியப் படை கம்பூச்சியாவைவிட்டு அகன்றது. 1993 இல் ஐ. நா. சபையின் தலைமையில் தேர்தல் நடத்தப்பட்டு, சுதந்திர அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## ருவாண்டா இன ஒழிப்பு

1990 ஆம் ஆண்டிலிருந்தே ருவண்டா அரச படைகளுக்கும் ருவண்டா தேசப்பிரேமிகள் முன்னணிக்கும் இடையே மோதல்கள் ஆரம்பித்தன. 1993 இல் இரண்டு பகுதியினருக்குமிடையில் சமாதானம் ஏற்பட்டாலும் 1994 ஏப்ரல் 6 ஆம் திகதி ருவண்டா, புருண்டி ஜனாதிபதிகள் இருவரும் விமான விபத்தொன்றில் இறந்து போகவே சண்டை மூண்டது. 1994 இல் ஐ. நா. சபையின் சமாதானப்படை ஒன்று சென்று நிலைமையைச் சமாளித்துவிட்டு மீண்டபிறகு மீண்டும் ருவண்டாவில் ஹுடு, டுட்ஸி இனங்களுக்கிடையே சண்டைமூண்டு வரலாறு காணாத மனித அவலம் ஏற்பட்டது. இதனையும் ஐ. நா. சபை தலையிட்டே மீளவும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

செயற்பாடு :
ஐ. நா. சபையின் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளை அட்டவணைப்படுத்தி அந்த நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளை அதில் உள்ளடக்குக

## உலகப் பொருளாதார நிர்வாகம்

கெடுபிடிப் போர் முடிவடைந்த 1980 ஆம் பதிற்றுகளில் ரஷ்யா வீழ்ச்சியடைந்து, முதலாளித்துவ அணி மட்டும் எஞ்சியிருந்தது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இரண்டு முகாம்களுக்கிடையேயும் போட்டி இடம் பெற்றதைத் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்தது. அதில் அமெரிக்கா

முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பரப்புவதில் ஈடுபட்டிருந்தது. அதற்காக 1949இல் ட்ரூமன் ஜனாதிபதி ''நான்முக வேலைத் திட்டத்தைச்'' செயற்படுத்தி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பொருளாதார உதவிகளை வழங்கி தமது ஆதிக்க முகாமுக்குள் ஈர்த்துக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். 1948இல் மேற்கொள்ளப்பட்ட மார்ஷல் திட்டத்தின் நோக்கமும், அதுவேயாகும். நேட்டோ அமைப்பை ஏற்படுத்திக் கொண்டதற்கு அதுவும் ஒரு காரணமாகும். இதே போன்று அமெரிக்கா ஏழை நாடுகளுக்கு கோதுமை, பிஸ்கட், பால், உணவுகளையும், உதவியாக வழங்கியது. உதாரணமாக "PL - 480" ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு கோதுமை மாவைக் குறைந்த விலையில் அதுவும் டொலரில் அன்றி, ரூபாவில் பணம் செலுத்தக்கூடிய முறையில் இன்றுவரை வழங்கிவருகிறது. 1980 ஆம் ஆண்டு வரை இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கு பகலுணவாக போஷணைச் சக்தி மிக்க பிஸ்கட் வழங்கியதையும் குறிப்பிடலாம்.

ரஷ்யா பொது உடைமைக் கோட்பாட்டையும் கம்யூனிஸ ஆட்சி முறையையும் பரப்புவதில் ஈடுபட்டது. சீனா, வடகொரியா, கியூபா, வியட்னாம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விசேடமாக உதவிகளை வழங்கியதோடு அபிவிருத்தியடைந்துவரும் ஆசிய, ஆபிரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுக்கு தொழினுட்பம், கல்வி, கலாசார உதவிகளை வழங்கியது. உதாரணமாக இலங்கைக்கு களனி ரயர் தொழிற்சாலையையும், முகத்துவார மாவரைக்கும் ஆலையையும் கட்டித்தந்தது. அது போன்றே இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானிகளுக்கு பெட்றிஸ் லுமும்பா நட்புறவுப் பல்கலைக்கழகத்திலும் வேறு பல்கலைக்கழகங்களிலும் பயிற்சி பெற சந்தர்ப்பத்தை வழங்கியும் மாணவர்களுக்கு வருடாந்தம் புலமைப்பரிசில்களைக் கொடுத்தும் உதவி புரிந்தது. அந்நாட்டு சுயமொழிகளில் ரஷ்யா அரசியல், இலக்கியம், வேறு செய்திகளையும் கொண்ட நூல்களையும் சஞ்சிகைகளையும் அச்சிட்டு, சலுகை விலையில் வழங்கிவந்தது. அதன் மூலம் அந்நாடுகளில் பொது உடைமைக் கோட்பாட்டைப் பரப்புவதே அதன் எதிர்பார்ப்பாகும்.

ரஷ்யாவும் ஏனைய பொது உடைமை நாடுகளும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கு இவ்வாறு உதவிகளைப் புரிந்து வந்துள்ளன. களனி ரயர் தொழிற்சாலையும் கொழும்பு முகத்துவாரத்திலுள்ள மா அரைக்கும் ஆலையும் சோவியத் ரஷ்யா அமைத்துத் தந்ததாகும். துல்ஹிரிய நெசவாலை கிழக்கு ஜேர்மனியின் உதவியுடன் உருவாக்கப்பட்டதாகும்.

உலகம் பூராகவும் அதிகமான நாடுகள் 1950 ஆம் பதிற்றில் பொது உடைமை கோட்பாட்டைப் பின்பற்றி தனியாருக்குச் சொந்தமான உடைமைகளைத் தேசிய மயமாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அப்போதிருந்த பல்தேசிய நிறுவனங்களை அகற்றுவதே இதன் நோக்கமாயிருந்தது. உதாரணமாக எகிப்தின் சுயெஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டமை, இலங்கையில் கனிய எண்ணெய், வாயு உற்பத்தித் நிறுவனங்களும் துறைமுகங்களும் அரசுடைமையாக்கப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக உலக வல்லரசுகள் தமது அரசியல், பொருளியல் தத்துவங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தன.

## அணிசாரா நாடுகளின் மகாநாடு

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ முகாமும், ரஷ்யாவின் தலைமையிலான பொது உடைமை முகாமும் தத்தமது அரசியல், பொருளியல், தத்துவங்களை முன்னெடுக்கையில் உலகின் ஏனைய நாடுகளான ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சார்ந்த நாடுகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று சுதந்திர அரசுகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. அந்நாடுகளின் சமூக, பொருளாதார நிலைகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவி ஒத்தாசை புரிய இவ்விரு முகாம்களும் முன்வந்தன. அப்படி உதவி வழங்கும் தரப்பாருக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு வழங்குவது இந்நாடுகளின் சுதந்திரத்திற்குப் பிரச்சினைகளைத் தருவதாயிருந்தது.



ஜவஹர்லால் நேரு
படம் 5.9

ஆகையால், நாடுகளின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், சமூக, பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்காகவும் நாடுகளுக்கிடையே நட்புறவு, சமாதான சக வாழ்வை நோக்கமாகக் கொண்டு ஆதிக்க முகாம்களின் பேதங்களிலிருந்து விடுபட்டு அணிசாரா நாடுகளின் அமைப்பொன்றை இந்நாடுகள் ஆரம்பித்துக்கொள்ள முற்பட்டன.

1954 இல் கொழும்பிலும் 1955 இல் இந்தோனேஷியாவின் பாண்டுங் நகரிலும் நடந்த தேசத் தலைவர்களின் மகாநாட்டில் இக்கருத்தைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தினர். அதில் இந்தியப் பிரதமர் நேரு அவர்களால் முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கோட்பாட்டின்படி 1961 செப்டெம்பர் 1 ஆம் திகதி யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேட்டில் இதன் முதலாவது மகாநாடு கூட்டப்பட்டது. அதில் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, எகிப்து, யூகோஸ்லாவிய நாடுகளின் தேசத் தலைவர்கள் கலந்து கொண்டனர். அணிசாரா அமைப்புக்கு அடிப்படையாக அமைந்த பஞ்சசீலக் கோட்பாடுகள் வருமாறு :

01. எல்லா நாடுகளினதும் சுதந்திரத்திற்கும் ஐக்கியத்திற்கும் மதிப்பளித்தல்
02. எந்தவொரு இனமும் இன்னொரு இனத்தை ஆக்கிரமிக்காதிருத்தல்.
03. எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு விடயங்களில் தலையிடாமை.
04. சமத்துவமும் சமூக நலனும் பேணப்படும் விதத்தில் செயற்படல்
05. சமாதான சகவாழ்வை மேற்கொள்ளல்.

அடுத்தடுத்து இடம்பெற்ற மகாநாடுகள் கூட்டப்பட்ட ஆண்டுகளும், இடம்பெற்ற நகர்களும், கலந்து கொண்ட நாடுகளின் தொகையும் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1961 | - | பெல்கிரேட் | (யூகோஸ்லாவியா) | - | 45 |
| 1964 | - | கெய்ரோ | (எகிப்து) | - | 47 |
| 1970 | - | லுஸாக்கா | (சம்பியா) | - | 53 |
| 1973 | - | அல்ஜியஸ் | (அல்ஜீரியா) | - | 75 |
| 1976 | - | கொழும்பு | (இலங்கை) | - | 85 |

செயற்பாடு

"ஆதிக்க அணிகள் இரண்டு இருக்கையில் கூட்டுச் சேராக் கொள்கையின் முக்கியத்துவம்" எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

## சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி

ஆசிய - ஐரோப்பிய கண்டங்கள் இரண்டையும் சேர்ந்த பெரும் நிலப்பரப்பைக் கொண்டிருந்த சோவியத் ரஷ்யா கடும் அதிகாரப் போக்கிலேயே ஆளப்பட்டது. காலப்போக்கில் அவ்வளவு பிரமாண்டமான பிரதேசத்தை ஆள்வது சிரமமானதாயிருந்தது. அதற்குப் பொருத்தமான அரசியல் பொறிமுறையொன்று காணப்பட்டாலும் கைத்தொழில், விவசாயத் துறைகளிலான நிர்வாகம் பலவீனமுற்றுச் சென்றது. இதனால் அரசியலிலும் பொருளியலிலும் சீர்திருத்தம் மேற்கொள்ள நேர்ந்தது. இதுவரை இருந்துவந்த பொது உடைமைக் கொள்கைக்குப் பதிலாக 1980 ஆம் பதிற்றின் இறுதிப் பகுதியில் அக்காலத்தில் ரஷ்ய ஜனாதிபதியாக இருந்த மிஹயில் கொர்பச்ஷேவ் அவர்களால், "பெரஸ்ரொய்கா", "கிளாஸ்நொஸ்ட்" எனும் சீர்திருத்தங்கள் அறிமுகப்-படுத்தப்பட்டன. அக்கொள்கையைத் தொடர்ந்து, கொர்பச்ஷேவின் ஆதரவாளரான யெல்ட்சின் ஜனாதிபதியாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. அதன் பிரதிபலனாக ரஷ்யா பொது உடைமைக் கொள்கையில் இருந்து விடுபட்டு சுதந்திர பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் நாடு ஒன்றாக மாறியது. அச்சீர்திருத்தங்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் வருமாறு:

01. அதிகாரவாதமும் அதில் காணப்பட்ட குறைபாடுகளும்
02. பொது உடைமைப் பொருளாதார முறையால் போட்டி அடிப்படையிலான உற்பத்தி நடைபெறாமை.
03. திட்டமிட்ட பொருளாதாரமான படியால், புதிய உற்பத்தி முறைகள் தோன்றாமையும் போட்டிமுறையிலான விலை நிலவாமையும்.

04. சந்தையின் தேவைகளைத் தெரிந்து கொள்ளாமல் உற்பத்தியை மேற்கொள்ளுதல்.

05. தேவைக்கு மேலதிகமாக உற்பத்தி செய்து, களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளல்

06. இவ்வுற்பத்திச் செயற்பாட்டால், ஏற்படும் நட்டத்தை அரசே தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தமை.

07. மிக அதிகமான பாதுகாப்புச் செலவு.

08. பொது உடைமைக் கொள்கையைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட அதிக செலவு.

09. சுதந்திர பொருளாதாரத்தைப்பற்றி புதிய தலைமுறையினரிடையே காணப்பட்ட அபிப்பிராயம்.

10. ஐக்கிய அமெரிக்கா அரசின் இரகசிய உளவுச் சேவையின் செயற்பாடுகள்.

## சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியால் ஏற்பட்ட விளைவுகள்

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்பட்ட விளைவுகளை தேசிய, சர்வதேச மட்டத்தில் ஆராய்ந்து பார்க்கலாம்.

### 01. சர்வதேச விளைவுகள்

01. பொது உடைமைப் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை.

02. முதலாளித்துவ அணியின் தலைமை நாடான ஐக்கிய அமெரிக்கா அரசு போட்டியில்லாத தலைமைக்கு வரல்.

03. பொது உடைமை முறைமை பரவுவதற்கு இருந்த சூழ்நிலை குறைந்து போனமை.

04. அணுவாயுத தொழினுட்பம் வேறு நாடுகளுக்கும் பரவியமை. உதாரணமாக :- இந்தியா, வடகொரியா, ஈரான்

05. கெடுபிடிப் போர் முற்றுப் பெற்றமை.

06. ஆயுத உற்பத்தி போட்டி இல்லாமற் போக நேர்ந்தமை

07. வோர்ஸோ அணி கலைந்து போனமை

## 02. தேசியமட்டத்திலான விளைவுகள்.

01. ரஷ்யா பல நாடுகளாகப் பிரிந்து போனமை. அவையாவன:

| | | |
|---|---|---|
| 01. ரஷ்யா | 06. உக்ரைன் | 11. கஸகஸ்தான் |
| 02. பெலோ ரஷ்யா | 07. மொல்டேலியா | 12. உஸ்பெகிஸ்தான் |
| 03. எஸ்தோனியா | 08. ஜோர்ஜியா | 13. கிர்கிஸ்தான் |
| 04. லத்வியா | 09. ஆர்மீனியா | 14. தஜிகிஸ்தான் |
| 05. லிதுவேனியா | 10. அசர்பைஜான் | 15. டுர்க்மெனிஸ்தான் |

02. ஒரே கட்சி ஆட்சிக்குப் பதிலாக பல்கட்சி ஜனநாயக ஆட்சிமுறை ஏற்பட்டமை.

03. பொது உடைமை வாதப் பொருளாதாரத்திற்குப் பதிலாக தனி உடைமைவாதப் பொருளாதாரம் ஏற்பட்டமை.

04. அரசாங்க முயற்சியாண்மைக்குப் பதிலாக தனியார் முயற்சியாண்மை ஏற்பட்டமை.

05. ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள் இல்லாமற் போனமை.

06. ஒரேயடியாக இறக்குமதிகள் பெருகியமையால் பணவீக்கம் வேகமாகக் கூடிச் சென்றமை.

07. வெளிநாட்டுக் கடன்களைப் பெற நேர்ந்தமை.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ரஷ்யாவிடமும், அதிலிருந்து பிரிந்த நாடுகளிடமிருந்தும் அணுவாயுத தொழினுட்பம், யுத்த விமானங்கள், ஏவாயுதங்கள் என்பன வடகொரியா, இந்தியா, ஈரான் ஊடாக பயங்கரவாதிகளின் கைகளுக்கும் சென்று விடுமோ என அஞ்சப்படுகிறது.

சோவியத் ரஷ்யாவில் புதிய பொருளாதார சீர்திருத்தம் அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கிளர்ச்சியுற்ற ஜனக் கூட்டம் பொது உடைமையை இழிவுபடுத்தி, லெனினது சிலைகளையும் அழித்தொழித்தனர். லெனின் கிரேட் சதுக்கம், அதன் பழைய பெயரான பீட்டர்ஸ் பேர்க் சதுக்கம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. என்றாலும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவும் அதிகரித்த பணவீக்கமும், உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடும், வேலை வாய்ப்பின்மையும் 1990ஆம் பதிற்றின் முடிவில் ''மீண்டும் பொது உடைமை வாதத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்'' எனும் மனப்போக்கு ரஷ்யாவெங்கும் பரவிச் சென்றது. இதனால் மறுசீரமைப்பை ஆதரித்த யெல்ட்ஸினுக்குப் பதிலாக அடுத்த தேர்தலில் பொது உடைமைவாதக் கட்சிப் பிரதிநிதியான விலாடிமிர் புட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பெலோ ரஷ்யா உட்பட, பிரிந்து சென்ற சில குடியரசுகளை ஒன்றிணைத்து ரஷ்யப் பொது நலவாயத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடைந்தமையால், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோ அமைப்பை எதிர்கொள்வதற்கு உருவாக்கிக் கொண்ட வோர்சோ அமைப்பு கலைக்கப்பட்டுவிட்டது. அத்தோடு யூகோஸ்லேவிய, செக்கோஸ்லோவாக்கிய நாடுகள் பிளவுண்டு போயின. கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனியுடன் ஒன்றிணைந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொது உடைமைவாதம் அகன்று முதலாளித்துவ வாதப் பொருளாதாரமும் ஜனநாயக ஆட்சிமுறையும் ஏற்பட்டதற்கு ரஷ்யாவின் ஆதரவு கிடைக்காமற்போனதும். காரணமாகும். இதன்படி உலகில் பொது உடைமைவாதம் பரவுவது வரையறுக்கப்பட்டுவிட்டது.

செயற்பாடு :

1. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கான காரணிகளைப் பரிசீலிக்க.
2. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னர் உருவான புதிய இராச்சியங்களைப் பற்றிய தகவல்களை சேகரிப்பதோடு, புறவுருவப்படமொன்றில் அவற்றைக்குறித்துக் காட்டுக.
3. யூகோஸ்லோவியாவிலிருந்து பிரிந்து உருவான நாடுகளை நிலவரையின் உதவியோடு பட்டியல்படுத்துக.

## ஜப்பானின் எழுச்சி

பியூஜியாமா எரிமலை
படம் 5.10

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக வல்லரசுகளின் நிலைக்கு எழுச்சியுற்ற முக்கிய ஆசியநாடு ஜப்பானாகும்.ஹிரோஷிமா, நாகஷாகி அழிவின் பின்னர் மார்ஷல் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜப்பான் எழுச்சியடைந்த விதத்தை இங்கு அவதானித்துப் பார்ப்போம். இரண்டாம் உலகப் போர் வரையான காலத்தில் ஜப்பானின் கைத்தொழில்களுக்காகத் தேவைப்பட்ட மூலப்பொருட்கள், கனிய எண்ணெய், நிலக்கரி, மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டன. ஜப்பானின் வளப் பற்றாக்குறையே இதற்கான காரணமாகும். யுத்தத்தின் காரணமாக அனைத்து தொழிற்சாலைகளும் செயற்பாடற்றுப் போயின. அவர்கள் யுத்தத்தில் கைப்பற்றிய நாடுகளைத் திருப்பிக் கொடுக்க நேர்ந்தமையால், ஜப்பானின் எல்லை சுருங்கிப் போய்விட்டது.

## ஐக்கிய அமெரிக்க அரசுப் படைகள் ஜப்பானில் நிலை கொள்ளல்

ஜப்பான் யுத்தத்தில் தோல்வியுற்றதுடன் டக்ளஸ் மெக் ஆத்தர் தளபதியின் கீழான படையொன்று ஜப்பானுள் பிரவேசித்தது. ஜப்பானின் யுத்த வலுவைக்

குறைத்தல், ஜப்பானுக்கு ஜனநாயக ஆட்சி முறை ஒன்றை அறிமுகஞ் செய்தல் என்பவற்றை அவர்களுடைய பிரதான நோக்கங்களாகக் குறிப்பிடலாம்.

ஜப்பான் அடைந்த முன்னேற்றத்தை அரசியல், பொருளியல், சமூகம், கலாசாரம் எனும் தலைப்புகளில் கலந்துரையாடுவோம்.

## அரசியல் முன்னேற்றம்

1946 இல் மெக் ஆத்தர் தளபதியின் மேற்பார்வையின் கீழ் புதிய ஜனநாயக ஆட்சிமுறை ஒன்று உருவாக்கப்பட்டது, அது 1947 மே 3 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட்டது. அதன்படி ஜப்பானிய மக்கள் சமாதானத்தினதும் ஜனநாயகத்தினதும் உயர்ந்த நோக்கங்களைக் காப்பாற்றுவதற்குக் கடப்பாடுடையோராயினர்.

> "ஜப்பானிய மக்களாகிய யாம் சமாதானத்தை என்றும் ஆசிப்போம்..... சமாதானத்தைக் காப்பதற்கும் கொடூர ஆட்சி, அடிமைத்துவம், மக்களின் துன்பம், பொறுமையின்மை என்பவற்றை இப்பூமியிலிருந்து அகற்றுவதற்கு முயற்சிக்கும் சர்வதேச சமூகத்துக்கு கௌரவமான இடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முழுமனதுடன் ஒத்துழைப்போம்".
>
> - ஜப்பானிய அரசியல் யாப்பு

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு முன்னர் ஜப்பானியப் பேரரசிடம் நாட்டின் பொது மக்களின் இறைமை ஒப்படைக்கப் பட்டிருந்தது. புதிய யாப்பின்படி நாட்டின் தலைமை அரசரிடமும், நிர்வாகத் தலைமை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத் திடமும் ஒப்படைக்கப்பட்டது. நாட்டு நிர்வாகத்தில் எந்த அதிகாரமும் பேரரசருக்கு வழங்கப்படவில்லை. பிரதமரை நியமித்தல், நீதியரசர் களை நியமித்தல் போன்ற பெயரளவிலான கடமைகள் போன்றவையே அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பிரதமர், டயட் எனப்படும் மக்கள் பிரதிநிதிகள் சபையால் பெயர் குறிப்பிடப்படுவதுடன், நீதியரசர்கள், அமைச்சரவையினால் பெயர் குறிப்பிடப்பட்ட பின்னர், பேரரசர் நியமனத்தை செய்வார். அமைச்சரவையின் வேண்டுகோளின்படி டயட் சபையைக் கூட்டுதல், கௌரவப் பட்டங்களை வழங்குதல், மக்களின் பெயரால் சட்டத்தைப் பிறப்பித்தல், ஒப்பந்தங்களில் கையெழுத்திடல் என்பனவும் பேரரசரின் பொறுப்புகளாகும்.

ஜப்பானிய அரச மாளிகை
படம் 5.11

## டயட் (பிரதிநிதிகள்) சபை

டயட் சபை

1947இல் மெக் ஆத்தரின் அரசியல் யாப்பின் படி உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் டயட்சபை எனப்படும். அது 486 பேரைக் கொண்ட மக்கள் பிரதி நிதிகள் சபையாலும், 250 பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைச் (மேல்) சபையாலும் ஆனது. 123 தேர்தல் தொகுதிகளில் ஒன்று நீங்கலாக ஏனைய அனைத்தும் பல்தேர்தல் தொகுதிகளாகும். இவற்றில் ஒவ்வொன் றிலிருந்தும் 2 - 5 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

இச் சபையின் ஆயுட் காலம் 4 ஆண்டுகளாகும். ஆலோசனைச் சபையின் ஆயுட் காலம் 06 வருடங்கள் ஆகும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பாதிப்பேர் வீதம் தெரிவாவர். 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமையுண்டு. கட்சி அடிப்படையிலான தேர்தல் இடம் பெறும். எல்லாச் சட்டங்களும் இவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பேரரசரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

## நிறைவேற்று அதிகாரம் - நிர்வாகம்

பேரரசரிடம் இருந்த சகல நிறைவேற்று அதிகாரங்களும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களின் தொகை 18இற்கு மேற்படாதிருக்கும். அவர்கள் அனைவரும் டயட் சபைக்கு கூட்டாகப் பொறுப்புச் சொல்ல வேண்டும். அமைச்சர்களை நியமிப்பதும் நீக்குவதும் பிரதமரின் அதிகாரங்களாகும். தற்போது பிரதமரின் நிர்வாகத்தின்கீழ் அமைச்சுக்கள் 12 உம் ஏஜன்ஸிகள் 5 உம் சுயேச்சையான கணக்காய்வுச் சபை ஒன்றும் செயற்படுகின்றன.

## உள்ளூராட்சி

ஜப்பானின் உள்ளூராட்சி 46 பிரிவுகளைக் கொண்டது. டோக்கியோ நகரம் இதில் ஒன்றாகும். பிரதேச சபை, நகரசபை, கிராம சபை எனும் அமைப்புகளால் உள்ளூராட்சிச் சபையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## நீதித்துறை

1889 மேஜி அரசியல் யாப்பின்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஓரளவுக்கு உயர் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. புதிய யாப்பின்படி அது சுதந்திரமான அமைப்பொன்றாக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு ஓய்வு பெறும் வரை அல்லது 10 வருடங்கள் வரை சேவையாற்ற முடியும். அவர்களிடையே ஊழல் காணப்பட்டால், ஆலோசனைச் (மேல்) சபையின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றால் பரிசீலனை செய்யப்படும்.

உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசருடன் 14 நீதியரசர்களைக் கொண்டதாகும். கீழ்நீதிமன்றங்களில் நீதிபதிகளின் நியமனம், உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படும் பெயர்ப் பட்டியலிலிருந்து அமைச்சரவையால் தெரிவு செய்யப்படும்.

## வெளிநாட்டுறவு

ஜப்பானிய வெளிநாட்டுத் தொடர்புகளின் அடிப்படை நோக்கமாக, சமாதானம், தன்னிறைவு, சுதந்திரம், மனித வர்க்கத்தின் நலன்களில் பங்கு பெறுதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் 1947இல் அறிமுகமான புதிய அரசியல் யாப்பு நட்பு நாடுகளின் செல்வாக்கால் ஏற்படுத்தப்பட்டது. 1951 செப்டெம்பர் மாதம் அமெரிக்காவின் சென்பிரன்சிஸ்கோ நகரில் ஜப்பானும் 48 நாடுகளும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் மூலம் அது சுதந்திர அரசொன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1956இல் ஜப்பான் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கம் பெற்று, அதன் சுறுசுறுப்பான அங்கத்தவராக மாறியுள்ளது.

1951இல் ஜப்பானும் அமெரிக்காவும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டன. 1960இல் அது திருத்தியமைக்கப்பட்டதோடு, அவ்வொப்பந்தத்தின் கீழ் அமெரிக்க படைகளுக்கு ஜப்பானில் தங்கியிருக்க அனுமதியளிக்கப்பட்டது. 1952இல் ஜப்பான், சீனாவுடனும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன் மூலம் முன்பு நிலவிய பகையுணர்வைத் தனித்துக்கொள்வதற்கு அது முயற்சித்தது. அதே போன்று 1956இல் ஜப்பான், ரஷ்யாவுடன் தூதரகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. மேலும் ஜப்பான், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1965ஆம் ஆண்டில் ஜப்பான் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கிய உதவி 485 மில்லியன் டொலர்களாகும். ஜப்பான் தனது தேசிய வருமானத்தின் ஒரு வீதத்தை வருடாந்தம் வெளிநாட்டு உதவியாக ஒதுக்கி வருகிறது. 1966 இல் 200 மில்லியன் டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியில் முதலீடு செய்ததன் மூலம் 20 வீத பங்குக்கு உரிமையாளரானது. 1955இல் ஜப்பான் GATT - கட் (வியாபாரத்திற்கும் தீர்வைக்குமான பொது உடன்படிக்கை - ஐ. நா. சபை) தாபனத்தில் அங்கத்துவம் பெற்றது. 1964இல் IMF - (சர்வதேச நாணய நிதியம் - ஐ. நா. சபை) இல் அங்கத்துவம் பெற்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக 1960 ஆம் ஆண்டுவரை 18 நாடுகளில் பயிற்சி நிலையங்களை நிறுவியுள்ளது.

## ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி

ஜப்பான் 1960 இல் பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினாலும் 1966 இல் பணவீக்கம் அதிகரித்-தமையால் அது சாத்தியமடையவில்லை. ஜப்பானியர்களின் பிரதான உணவு சோறு என்பதனால், நெல்லையும் அதனுடன் கோதுமை, பார்லி போன்ற-வற்றையும் உற்பத்தி செய்கின்றனர். இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் பிரபுக்களுக்கே நிலம் சொந்தமாக இருந்தமையால், விவசாயிகள் சொந்த நிலமற்றவர்களாக இருந்தனர். புதிய அரசியல் யாப்பால் பேரரசரின் அதிகாரங்கள் அகற்றப்பட்டமையால் பிரபுக்களினதும் ஆதிக்கம் மறைந்து போனது. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சீர் திருத் தங் களினால் நிலம் விவசாயிகளுக்கானது. முழு நிலத்திலும் பயிரிடக்கூடிய பரப்பளவு 16.2% மட்டுமே. இதனால் 2.5 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட சிறிய விவசாயப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. விளைவிக்கக்கூடிய நிலத்தின் ஒவ்வொறு அங்குலத்தையும் பயிர்ச் செய்கைக்குட்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இயந்திரமயப்படுத்தப்பட்ட நவீன உற்பத்தி முறைகள் கையாளப்படுவதால் விளைச்சல் வெகுவாக அதிகரித்துள்ளது. புற்றரைகள் காணப்படாமையால் விலங்கு வேளாண்மை குறைந்தளவிலேயே இடம் பெறுகிறது. இங்கு 1964 இல் முழு நிலப்பரப்பிலும் 2/3 பங்கு காடாகக் காணப்பட்டது. அந்நாட்டின் மரத் தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து மரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்றாலும் மீளக் காடாக்கம் மேற்கொள்ளப் படுகின்றது.

ஹிரோசிமா குண்டு வெடிப்பு
நினைவுச் சின்னமான சமாதானப் பூங்கா
படம் 5.13

ஆதியிலிருந்தே மீன்பிடியில் ஜப்பான் முன்னணியில் இருந்துவந்துள்ளது. 1961 - 1964 கால கட்டத்தில் அரச தலையீட்டால் மீன் உற்பத்தி அதிகரித்தது. ஜப்பானின் கைத்தொழில் ஆக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி மின்சக்தியாகும்.

ஜப்பானின் விளையாட்டரங்கு
படம் 5.14

கூடிய மழைவீழ்ச்சியைப் பெறும் நாடானபடியால், 1955 ஆம் ஆண்டளவில் முழு மொத்த மின்னுற்பத்தியில் 70% நீராலேயே பெறப்பட்டது. 1968ஆம் ஆண்டாகும் போது உலகிலேயே அதிகளவு மின்சாரத்தை வீட்டுப் பாவனைக்குப் பயன்படுத்தும் நாடாக ஜப்பான் திகழ்ந்தது. 1962இல் அனல் மின்னையும் 1965இல் அணுமின்னையும் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

ஜப்பானிய எண்ணெய்க் கப்பல்
படம் 5.15

ஜப்பான் கனிய வளத்தைப் பொறுத்தவரையில் ஓர் ஏழை நாடாகும். அங்கு அதிகமாகக் காணப்படும் நிலக்கரியும் பாவனைக்கு பொருத்தமானதல்ல. காரீயம், துத்தநாகம், ஆஸனிக், கந்தகம், சுண்ணக்கல், சிலிகா, டொலமைட், பெல்ஸ்பார், ஜிப்ஸம் போன்ற கனியங்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. கனிய எண்ணெயின் முழுத் தேவையில் 2% உள்நாட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனால் அந்நாட்டுக்குத் தேவைப்படும் கனியங்களுள் 90 வீதத்தையும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து கொள்ள வேண்டியுள்ளது. என்றாலும் அவர்களுடைய கைத்தொழில்துறை மிகவும் சிறப்பான நிலையிலுள்ளது.

## கைத்தொழில் விருத்தி

இருபதாம் நூற்றாண்டாகும் போது ஜப்பானில் இலகு கைத்தொழில் உற்பத்தியே முக்கியமானதாக இருந்தது. 1930ஆம் ஆண்டாகும் போது பாரிய உற்பத்திக் கைத்தொழில்கள் ஆரம்பமாயின என்ற போதிலும் அக் கைத்தொழில்களும் கூட குறிப்பிடத்தக்க அளவு திருப்தியானதாக இருக்கவில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானின் கைத்தொழில்கள் முற்றாக ஸ்தம்பித்துப் போய்விட்டன. யுத்தத்தின் பிறகு மூன்று கட்டங்களினூடாக கைத்தொழில் முன்னேற்றத்தை அவதானிக்கலாம்

புகையிரத நிலையத்தில் நிற்கும் மக்கள்
படம் 5.16

1 ஆம் கட்டம் - 1945 - 1952 புனரமைப்புக் காலம் - கைத்தொழில்களை மீளக் கட்டியெழுப்புதல்.

2 ஆம் கட்டம் -1952 - 1959 ஒன்றிணைக்கும் காலம் - பரந்த தொடர்புகளைக் கையாளுதல்.

3 ஆம் கட்டம் -1960 - 1967 எழுச்சிபெறும் காலம் - பல்வேறுபட்ட கைத்தொழில்களிலும் கவனம் செலுத்துதல்.

பணக்கார முதலீட்டாளர்கள் இருந்தமை கைத்தொழிலின் வெற்றிக்குக் காரண மாயிருந்தது. ஆயினும் ஜப்பானிய வரலாற்றில் பெரும் அர்ப்பணிப்பும் ஒழுங்குமே அதன் முன்னேற்றத்தின் அடிப்படை எனலாம். பண்டங்களின் தரமும் முழு உலகிலும் வர்த்தகக் கண்காட்சிகளை நடத்தியமையும் ஜேர்மனியினதும் ஐக்கிய அமெரிக்காவினதும்

இரண்டு மாடி புகையிரதம்
படம் 5.17



மோட்டார் வாகன தொழிற்சாலை
படம் 5.18

விலைகளை விடக் குறைவான விலையில் விற்றதும் புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்தியதுமான காரணங்களால் ஜப்பானின் கைத்தொழில் பெரும் வெற்றியளித்தது.

## முக்கியமான கைத்தொழில்கள் வருமாறு

- கப்பல் கட்டுந் தொழிலில் நவீன நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னணி வகித்தது. 1956இல் உலகிலே கப்பல் கட்டுதலில் முதலிடத்திற்கு வந்தது.
- புகையிரத உற்பத்திக் கைத்தொழில் - 1960ஆம் பதிற்றுகளில் ஆர்ஜன்டீனா, ரஷ்யா, சவூதி அரேபியா நாடுகளுக்கு அதிவேக என்ஜின்களைக் கொண்ட புகையிரதங்களை ஏற்றுமதி செய்தது.
- 1960 ஆம் பதிற்றில் ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட தொலைக்காட்சி, வானொலி, குளிரூட்டி, மின்னுபகரணங்கள் என்பவற்றை உலகில் எந்தவொரு நாட்டிலும் காணக்கூடியதாயிருந்தது. 1965இல் 612 மில்லியன் டொலருக்கு இவ்வுபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- 1966இல் உலக மோட்டார் வாகன உற்பத்தியில் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டது. 1990ஆம் பதிற்றில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் பெருஞ் சவாலாய் அமையும் வண்ணம் அது இத்துறையில் வளர்ச்சிபெற்றது.
- 1960 - 1965 காலகட்டத்தில் உலகின் பிரதான மோட்டார் சைக்கிள் உற்பத்தி நாடாக ஜப்பான் இருந்தது. தனது உற்பத்தியை பதினைந்து மடங்கால் அதிகரித்துக் கொள்ள அதனால் முடிந்தது.
- ஜப்பானில் இரும்புத் தாதும் நிலக்கரியும் இல்லாதபோதும், வெளிநாடுகளில் இருந்து அதனை இறக்குமதி செய்து இரும்பு உருக்குச் சந்தையில் முன்னணி நாடாக மிளிர்கின்றது. 1965இல் 27,502,000 தொன் இரும்பையும் 41,161,000 தொன் உருக்கையும் அது உற்பத்தி செய்து உலகில் மூன்றாவது இடத்துக்கு வந்தது. 1960இல் துருப்பிடிக்காத இரும்பை உற்பத்தி செய்வதில் உலகில் மூன்றாம் இடத்தை ஏற்கனவே பெற்றிருந்தது.

- ❖ புகைப்படக்கருவி, மூக்குக்கண்ணாடி, தொலைநோக்கி என்பனவும் புகழ்பெற்ற உற்பத்திகளாகும்.
- ❖ இதன் உபகரணங்கள் முழு உலகிலும் குறிப்பாக ஆசியாவிலும் மிகப் பிரசித்தமானவை.

## வெளிநாட்டு வர்த்தகம்

ஜப்பானின் முழுப் பொருளாதாரமும் சர்வதேச வர்த்தகத்தின் மீதே தங்கியிருந்தது என்பது வெளிப்படையானதாகும். ஜப்பானில் மூலப்பொருட்கள் போதியளவு இல்லாத படியால், இதற்காக வெளிநாடுகளிலிருந்தே அவற்றைப் பெறவேண்டியிருந்தது. குறிப்பிட்டுச் சொல்வதாயின் 90% மூலப்பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றைத் தமது தொழில் நுட்பத்தால், முடிவுப் பொருளாக மாற்றி ஏற்றுமதி செய்வதிலேயே அதன் வெளிநாட்டு வர்த்தகம் தங்கியிருந்தது. 1961 இல் அந்நாட்டின் மொத்த உற்பத்தியில் 55% வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக்கொண்டே உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாயின. ஜப்பானிய உற்பத்திகளில் காணக்கூடியதாக இருந்த சிறப்பம்சங்களாக அதன் போட்டித்தன்மையான விலை, கவர்ச்சியான தன்மை, நீண்டகாலப் பாவனை என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனால் உலகம் முழுவதிலும் இவர்களுடைய பொருட்கள் ஜனரஞ்சகமாயின.

## சமூக நிலைமை

ஜப்பான் கைத்தொழில்மயமானபடியால், பெருந்தொகையான மக்கள் நகரை நோக்கி வர ஆரம்பித்தனர். இதனால் 1960ஆம் பதிற்றின் முடிவில் ஜப்பான் நகரமயமான ஒரு நாடாக மாற்றமுற்றது.

தந்தையை முதன்மையாகக் கொண்ட சமூகமான ஜப்பானில், வீட்டுப் பாவனைக்கு நவீன பொருட்கள் வந்தமையால் வீட்டு வேலைப்பளு குறைந்து ஜப்பானியப் பெண்களுக்கு போதியளவு சுதந்திரம் கிட்டியது. இதனால் அவர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினர். புதிய யாப்பின்படி குழந்தையை வளர்ப்பது, கல்வியைப் பெற்றுக் கொடுப்பது என்பவை தந்தையினதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜப்பானியக் குடும்பங்களினுள் தந்தையின் ஆதிபத்தியம் புதிய மறுசீரமைப்புகளின் பின்னர் குறைவடைந்துள்ளது. அதன்படி ஜப்பானிய இளவல்கள் மிகவும் பரந்துபட்ட சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர்.

## சமூக நலன்புரிச் சேவைகள்

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் கைத்தொழில் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து, தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். அவற்றில் காணக்கூடிய சிறப்பான பண்பாகக் குறிப்பிட வேண்டியது, அவர்களிடையே காணப்படும் உறுதியான நம்பிக்கையும், ஒழுக்கமும் ஆகும். 1965 ஆகும் போது 53,000 தொழிற்சங்கங்கள் ஜப்பானில் தோற்றம் பெற்றன.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் தொழிலாளருக்கான நலன்புரிச் சேவைகள் பேரளவில் அபிவிருத்தியுற்றுள்ளன.

ஜப்பானிய குடும்பம்
படம் 5.19

கைத்தொழில் மயத்துடன் சூழல் மாசுறலும் ஏற்பட்டமையால், ஜப்பானியருக்கு சூழல் பாதுகாப்புக்காக பெருந் தொகையைச் செலவு செய்ய வேண்டியிருந்தது. 1960 ஆம் ஆண்டுகளின் முடிவில் மாசுற்ற நீரைச் சுத்திகரிப்பதற்கும் கழிவுகளை முகாமைத்துவப்படுத்துவதற்கும் அவர்களது கவனம் ஈர்க்கப்பட்டது.

புதிய வீடு படம் 5.20

ஏழைகளைப்பற்றிய சட்டம், வலது குறைந்தோர், குழந்தைகள் நலன்புரிச் சட்டம், தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கான காப்புறுதி, பொது மக்கள் காப்புறுதிச் சட்டம், நலன்புரி, ஓய்வூதிய காப்புறுதிச் சட்டம், தாய் - சேய் நல காப்புறுதி, வயோதிபர்களின் நலன் காப்புச் சட்டங்கள் போன்ற சட்டதிட்டங்கள் பலவற்றையும் 1950 ஆம் பதிற்றில் அறிமுகப்படுத்தினர். 1964 ஆகும் போது 98.5% பேருக்கு வைத்தியக் காப்புறுதி வசதி செய்யப்பட்டிருந்தது.

இரண்டாம் உலகப்போரை அடுத்து கடுமையான வீட்டுத் தட்டுப்பாடு நிலவியது. 1955 இல் அரசாங்கம் வீடமைப்பில் ஈடுபட்டு, வருடாந்தம் மூன்று இலட்சம் வீடுகள் வீதம் கட்டியெழுப்பியது. 1964 இல் எட்டு இலட்சத்து நாற்பத்து மூவாயிரம் வீடுகளை அமைத்ததோடு, தனியாருக்கு வீடமைப்புக் கடனாக 98,513 மில்லியன் தொகையைப் பெற்றுக் கொடுத்தது. அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்டவை மாடிவீடுகளாகும். அது ஜப்பானிய மக்கள் வாழ்க்கையைப் புதிய பாதையில் இட்டுச் செல்வதற்கு வழிகோலியது.

## கல்வி

ஜப்பானில் 1947 இல் இயற்றப்பட்ட கல்வி சம்பந்தமான ஆரம்பச் சட்டமும் பாடசாலைக் கல்விச் சட்டமும் செயற்படுத்தப்பட்டன. அதன்படி 15 வயது வரை கட்டாயக் கல்வியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கனிஷ்ட பிரிவு பாடசாலையில் மதிய உணவு படம் 5.20

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு கல்வித் திணைக்களத்தாலேயே கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நூலகங்கள், நூதன சாலைகள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கும் கல்வித் துறைக்குப் பங்களிப்புச் செய்தன.

1966ஆம் ஆண்டளவில் ஜப்பானிய பல்கலைக்கழகங்களுக்கு ஐக்கிய அமெரிக்கா தென் கொரியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து 6990 ஆய்வாளர்கள் சமுகமளித்தனர். ஜப்பானியப் பல்கலைக்கழகங்களில் கற்போரில் முப்பது வீதத்தினர் விஞ்ஞானத் துறையில் கற்கையை மேற்கொண்டுள்ளனர்.

உயர் கனிஷ்ட பாடசாலையின் வகுப்பறை

## சமய, கலாசார நிலமை

ஜப்பானின் பிரதான சமயம் பௌத்தமும், ஷிண்டோவும் ஆகும். திருமண, மரணச் சடங்குகளின் போது கூடியளவு சமயக் கிரியைகளை அவதானிக்கலாம். கொன்பியூஸியஸின் போதனைகளும் தத்துவமொன்றாக நடைமுறையில் உள்ளது. புதிய அரசியல் யாப்பின்படி அரசாங்கம் எந்தவொரு சமய கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை.

புத்தர் சிலை
படம் - 23

இதே போன்று சித்திர, சிற்பக் கலைகளிலும் புராதன காலத்திலிருந்தே ஜப்பான் பிரசித்தமடைந்திருந்ததோடு 19ஆம் நூற்றாண்டின் பின்னர் மேற்கத்திய செல்வாக்கிற்கு உட்பட்டது. ஜப்பானின் 'உகியோவ்'' எனும் சித்திரக் கலை ஐரோப்பாவிலும் பரவியுள்ளது. அதே போல் ஜப்பானில் வருடாந்தம் நடைபெறும் ''டோக்கியோ பைனோல்'' எனும் சித்திரக் கண்காட்சி உலகில் நடத்தப்படும் பிரமாண்டமானகண்காட்சிகளுள் ஒன்றாகும்.

சம்பிரதாய சங்கீதம் போன்று, மேற்கத்தைய சங்கீதமும் ஜப்பானில் மிகப் பிரசித்தமானதாகும். 1961 இல் ஜப்பானில் இடம்பெற்ற கிழக்குமேற்கு சங்கீதக் கச்சேரி இதற்குச் சிறந்ததொரு உதாரணமாகும்.

புது வருட விடுமுறையில்
மக்களின் பூஜை

விளையாட்டுத்துறையிலும், சம்பிரதாய பூர்வமான சுமோ, ஜூடோ, கெந்தோ (வாட்போர்), என்பன ஜனரஞ்சகமானவையாகும். 1964இல் டோக்கியோவில் நடைபெற்ற 18 வது ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை, மல்யுத்தம், கரப்பந்து, பாரந்தூக்குதல், ஜூடோ, உடற்பயிற்சிப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்

கொள்வதற்கு ஜப்பானால் முடியுமாயிருந்தது. பேஸ்போல், கொல்ப், நீச்சல் என்பன ஜனரஞ்சகமடைந்துள்ளன.

இன்று ஜப்பான் உலகின் செல்வந்த, உயர் தொழினுட்பம் வாய்க்கப்பெற்ற நாடாக மிளிர்கிறது. ஜப்பானிய மக்களது வினைத்திறன் 2006 ஆம் ஆண்டில் 104% ஆகும். உலகில் உயர்ந்த வாழ்க்கைத் தரமான HDI (மானுட அபிவிருத்திச் சுட்டெண்) பெறுமானத்திலும் அண்மைக் காலத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாறு ஜப்பான் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் குப்புற விழுந்தாலும் சம்பிரதாய பூர்வமான கலை, கலாசார அம்சங்களைப் பாதுகாத்துக் கொண்டு, நவீன தொழினுட்பத்தினூடாகவும் நல்லெண்ணங்களாலும் முன்னேற்றமடைந்த இனமாக எழுச்சியுற்று உலகின் ஏழு கைத்தொழில் (G - 7) வல்லரசுகளுள் ஒன்றாக, அதுவும் ஆசியாவில் ஒன்றே ஒன்றாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது.

## பயிற்சி

01. முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களில் ஐக்கிய அமெரிக்க அரசு ஈடுபட நேர்ந்தமைக்கான காரணங்களை முறையே குறிப்பிடுக.

02. ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவ அணியின் தலைமையை ஏற்ற பின்னர் பின்பற்றிய செயற்பாடுகள் யாவை ?

03. தற்போதும் பொது உடைமைவாதம் நிலவும் நாடுகள் மூன்றின் பெயர் குறிப்பிடுக ?

04. கெடுபிடி யுத்தம் என்பதனால் கருதப்படுவது யாது ?

05. இப்பாடத்தில் பிரஸ்தாபிக்கப்படாத ஐ. நா. சபையின் சமாதான நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக ?

06. ஐக்கிய அமெரிக்க இராணுவம் ஜப்பானில் பிரவேசித்ததற்கான பிரதான நோக்கங்கள் இரண்டும் எவை ?

07. அடைப்புக்குறிக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.

(நேட்டோ / ஐந்தாண்டுத்திட்டம் / வூட்ரோ வில்சன் / இலங்கை / 1961 / இந்தியா/ யூகோஸ்லோவியா / இஸ்ரேல் / சுயஸ்கால்வாய் / ரூஸ்வெல்ட / டயட் வோர்சோ)

7.1 சர்வதேச சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி .....

7.2 இரண்டாம் உலகப் போரின் போது ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி .....

7.3 வட அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் ..... என சுருக்கமாகக் குறிப்பிட்டப்படுகிறது.

7.4 1948 இல் முன்வைக்கப்பட்ட பெல்பர் அறிக்கையின் படி ..... எனும் நாடு உருவானது.

7.5 நேட்டோ அமைப்பை எதிர்கொள்வதற்காக பொது உடைமை நாடுகள் ..... அமைப்பைத் தோற்றுவித்துக் கொண்டன.

7.6 ஸ்டாலின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக ..... செயற்படுத்தினார்.

7.7 1956 இல் எகிப்திய ஜனாதிபதி ..... தேசிய உடைமையாக்கினார்.

7.8 கூட்டுச் சேரா மகாநாடு ..... ஆண்டில் ..... நாட்டில் முதல் முறை கூடியது.

7.9. ஜப்பானியப் பாராளுமன்றம் ..... எனக் குறிப்பிடப்படும்.

08. கீழ்வரும் கூற்றுக்கள் சரியா, பிழையா எனக்கண்டு (✓/×) அடையாளத்தை இடுக.

8.1 ஜப்பானில் இரும்பும் கனிய எண்ணெயும் நிறையக் காணப்படுகின்றன ( )

8.2 ஜப்பானியப் பேரரசரிடம் அந்நாட்டின் நிறைவேற்றதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ( )

8.3 ஜப்பானின் உகியோவ் எனும் சித்திரக் கலை மரபு ஐரோப்பாவிலும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது ( )

8.4 பேர்ள் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியமையே ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகப் போருக்கு வரக் காரணமானது. ( )

8.5 1951 இல் சன்பிரான்சிஸ்கோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் ஜப்பான் சுதந்திரமடைந்தது. ( )

8.6 க்ளாஸ்நொஸ்ட், பெரஸ்ரொயிகா எனும் சீர்திருத்தங்களே ரஷ்யாவில் தனி உடைமைப் பொருளாதாரத்துக்கு வழிவகுத்தன. ( )

8.7 சோவியத் ரஷ்யா தற்போது 22 நாடுகளாகப் பிரிந்துபோயுள்ளது. ( )

8.8 கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பு பஞ்சசீலக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவானது ( )

8.9 1994 இல் ருவாண்டாவுக்கு ஐ. நாடுகளின் சமாதானப்படை அனுப்பப்பட்டது ( )

09. உலகப்படத்தில் கீழ்வரும் இடங்களைக் குறிப்பிடுக.

| நாடுகள் | நகர்கள் |
|---|---|
| 1. கியூபா | 1. சென். பிரான்சிஸ்கோ |
| 2. பிலிப்பைன்ஸ் | 2. டெஹ்ரான் |
| 3. ஜப்பான் | 3. பெர்லின் |
| 4. பிரித்தானியா | 4. பேர்ள் துறைமுகம் |
| 5. ஈராக் | 5. சென். பீட்டர்ஸ் பேர்க் |

10. "அ" தொகுதியிலுள்ள விடயத்திற்குப் பொருத்தமான "ஆ" தொகுதியிலுள்ள விடயத்தைத் தெரிந்து உரிய எழுத்தை இடுக.

| அ | ஆ |
|---|---|
| 10.1 பெல்பொட் ( ) | அ. கியூபாவின் பெடிஸ்டா ஆட்சியைப் பதவி கவிழ்த்தவர் |
| 10.2 பெட்றிஸ் லுலும்பா நட்புறவுப் பல்கலைக்கழகம் ( ) | ஆ. ரஷ்யாவின் சர்வாதிகார ஆட்சியாளர் |
| 10.3 பிடெல் கஸ்ட்ரோ ( ) | இ. கூட்டுச்சேரா மகாநாட்டில் பஞ்சசீலக் கோட்பாட்டைச் சமர்ப்பித்தவர் |
| 10.4 ஜோஸப் ஸ்டாலின் ( ) | ஈ. கம்பூச்சியாவின் சர்வாதிகாரி |
| 10.5 ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ( ) | உ. ரஷ்யாவில் உள்ளது |
| 10.6 ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ( ) | ஊ. கூட்டுச்சேரா மகாநாட்டுக்கு 1976 இல் தலைமை வகித்தவர். |
| 10.7 லூசிதானியா மூழ்கடிப்பு ( ) | எ. பிரித்தானியப் பிரதம அமைச்சர் |
| 10.8 வின்ஸ்டன் சேர்ச்சில் ( ) | ஏ. ஐக்கிய அமெரிக்கா குடியரசு போரில் ஈடுபடக்காரணம் |
| 10.9 லெனின் ( ) | ஐ. ஜப்பானை வெற்றி கொண்ட தளபதி |
| 10.10 டக்ளஸ் மக் ஆத்தர் ( ) | ஒ. பொது உடைமை ஆட்சியை முதலில் ஸ்தாபித்தவர் |